Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

# ஹலோ மிரர் மெட்ராஸ்
RNI No.TNBIL/2021/81709
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 3 | சென்னை | தினசரி | 6 பக்கம் | வியாழக்கிழமை, ஜனவரி 11 2024 | இதழ் 179

## நாளை முதல் பொங்கல் சிறப்பு பேருந்துகள் இயக்கம்

## போக்குவரத்து ஊழியர்கள் பணிக்கு திரும்பினார்கள் 19-ந் தேதி மீண்டும் பேச்சுவார்த்தை



சென்னை, 11 ஜனவரி 2024: வேலை நிறுத்தப்போராட்டத்தை வாபஸ் பெற்று போக்குவரத்து ஊழியர்கள் அனைவரும் இன்று பணிக்கு திரும்பினார்கள்.

தமிழர் திருநாளான தைப்பொங்கல் திருநாள் வருகிற 15ந் தேதி கொண்டாடப்படுகிறது. இதையொட்டி நாளை (வெள்ளிக்கிழமை) முதல் 14ம் தேதி வரை 3 நாட்களுக்கு சென்னை மற்றும் பிற ஊர்களுக்கு சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட உள்ளன. சென்னையில் இருந்து வெளியூர்களுக்கு 4,706 சிறப்பு பேருந்துகளும், பிற இடங்களில் இருந்து 8,478 சிறப்பு பேருந்துகளும் இயக்கப்பட உள்ளன.

சென்னையிலிருந்து பல்வேறு ஊர்களுக்கும் செல்ல கோயம்பேடு, தாம்பரம், மாதவரம் உள்ளிட்ட 5 இடங்களிலிருந்து பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இதுதவிர திருச்சி, தஞ்சாவூர், கரூர், மதுரை, திருநெல்வேலி, தூத்துக்குடி உள்ளிட்ட தென் மாவட்டங்களுக்கு செல்லும் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக பேருந்து கிளாம்பாக்கம் பேருந்து முனையத்தில் இருந்து இயக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறப்புப் பேருந்துகள் இயக்கங்கள் குறித்து அறியவும், புகார் தெரிவிக்கவும் 94450 14450, 94450 14436 ஆகிய எண்களை தொடர்பு கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. பொங்கல் விடுமுறைக்குப் பின் 16, 17, 18 ஆகிய தேதிகளிலும் சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட உள்ளன.

### பணிக்கு திரும்பினார்கள்

பண்டிகை காலத்தில் மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தக்கூடாது என்று சென்னை ஐகோர்ட் அறிவுறுத்தியதை ஏற்று வேலை நிறுத்தப்போராட்டத்தை போக்குவரத்து ஊழியர்கள் வாபஸ் பெற்றுள்ளனர். அனைவரும் இன்று பணிக்கு திரும்பினார்கள்.

அரசு போக்குவரத்துக்கழகத்தில் பணியாற்றி ஓய்வுபெற்ற ஓய்வூதியதாரர்களுக்கு கடந்த 96 மாதங்களாக வழங்கப்படாமல் உள்ள அகவிலைப்படி உயர்வை வழங்க வேண்டும். பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்த வேண்டும். 15-வது ஊதிய உயர்வு பேச்சுவார்த்தையை உடனடியாக தொடங்க வேண்டும். காலிப்பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும். ஒப்பந்த தொழிலாளர்களை பணியமர்த்தக்கூடாது.

போக்குவரத்துத்துறையின் வரவு மற்றும் செலவுக்கு இடையிலான வித்தியாச தொகையை பட்ஜெட்டில் ஒதுக்க வேண்டும் என்ற 6 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி மாநிலம் முழுவதும் அண்ணா தொழிற்சங்கம், சி.ஐ.டி.யு., ஏ.ஐ.டி.யு.சி., பா.ம.க., தே.மு.தி.க. போன்ற பல்வேறு அரசு போக்குவரத்துக்கழக தொழிற்சங்கத்தினர் நேற்று முன்தினம் முதல் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தொ.மு.ச., ஐ.என்.டி.யூ.சி. உள்ளிட்ட தொழிற்சங்கத்தினர் இந்த வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்ளாததால், ஓரளவு பஸ்கள் ஓடின. மக்களின் இயல்பு வாழ்க்கையில் பெரிய அளவில் பாதிப்பு இல்லை.

### ஐகோர்ட்டில் வழக்கு

இந்த நிலையில் பொங்கல் பண்டிகை நேரம் என்பதால் போக்குவரத்துக்கழக ஊழியர்களின் இந்த போராட்டம் தொடர்ந்தால் பொதுமக்கள் கடுமையாக பாதிக்கப்படுவர்.

எனவே இந்த போராட்டத்துக்கு தடை விதிக்க வேண்டும் என்று சென்னை ஐகோர்ட்டில் சோழிங்கநல்லூரைச் சேர்ந்த பால் கிதியோன் என்பவர் பொதுநல மனு தாக்கல் செய்தார்.

இந்த வழக்கு தலைமை நீதிபதி எஸ்.வி.கங்கா புர்வாலா, நீதிபதி டி.பரத சக்ரவர்த்தி ஆகியோர் கொண்ட முதல் பெஞ்சில் நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது அண்ணா தொழிற்சங்கம், சி.ஐ.டி.யு., ஏ.ஐ.டி.யு.சி., நேதாஜி போக்குவரத்து ஊழியர்கள் சங்கம் உள்ளிட்ட தொழிற்சங்கங்கள் சார்பில் மூத்த வக்கீல்கள் விஜய் நாராயண், பட்டாபி ரகுராமன், வக்கீல்கள் பாலன் ஹரிதாஸ், சி.கனகராஜ், ஜார்ஜ் வில்லியம்ஸ் உள்ளிட்ட பலர் ஆஜராகி வாதிட்டனர்.

### கோர்ட் அறிவுரை

இருதரப்பு வாதங்களையும் கேட்ட தலைமை நீதிபதி, 'தமிழ்நாட்டின் முக்கியமான பொங்கல் பண்டிகை நேரத்தில் போக்குவரத்துக்கழக ஊழியர்களின் இந்த போராட்டத்தால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். அவர்களுக்கு இடையூறு ஏற்படுத்தக்கூடாது. எனவே பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு போக்குவரத்து தொழிற்சங்கங்கள் வருகிற 19ந்தேதி வரை இந்த போராட்டத்தை தற்காலிகமாக நிறுத்தி வைக்க வேண்டும்.

தமிழ்நாடு அரசும் தற்காலிகமாக 92 ஆயிரம் ஓய்வூதியதாரர்களுக்கும் ரூ.2 ஆயிரத்தை தற்போது வழங்கிவிட்டு பின்னர் கழித்துக்கொள்ளட்டும்" என்றும் யோசனை தெரிவித்தனர்.

ஆனால் இதை இருதரப்பும் ஏற்றுக்கொள்ளவில்லை. அதற்கு நீதிபதிகள், "இருதரப்பும் இப்படி பிடிவாதம் காட்டினால் எப்படி?" என்று கேள்வி எழுப்பினர்.

இதையடுத்து தொழிற்சங்கங்கள் தரப்பில், "பொங்கல் பண்டிகையை முன்னிட்டு பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு வருகிற 19ந்தேதி வரை இந்த போராட்டத்தை தற்காலிகமாக நிறுத்தி வைக்கிறோம்" என்று உத்தரவாதம் அளித்தனர். இதையடுத்து நீதிபதிகள், "போக்குவரத்துக்கழக ஊழியர்கள் இன்று முதல் வேலைக்கு திரும்ப வேண்டும். அவ்வாறு பணிக்கு திரும்பும் ஊழியர்கள் மீது எந்தவொரு ஒழுங்கு நடவடிக்கையும் அரசு எடுக்கக்கூடாது" என்று உத்தரவிட்டு, வழக்கை முடித்து வைத்தனர்.

### மீண்டும் வேலைநிறுத்தம்

அண்ணா தொழிற்சங்க தலைவர் கமலகண்ணன் நிருபர்களிடம் கூறியதாவது:-

'பொங்கல் பண்டிகையை முன்னிட்டு வேலை நிறுத்தத்தை 19-ந்தேதி வரை ஒத்திவைக்க ஐகோர்ட் உத்தரவிட்டு உள்ளது. பொங்கலுக்கு பஸ்களை ஓட்ட வேண்டும் என்று நீதிமன்றம் கேட்டு கொண்டுள்ளது. அதனால் தொழிலாளர்கள் பணிக்கு திரும்புகின்றனர். ஆனால் அரசு தொழிலாளியை பற்றி கவலைப்படாமல் விடாப்பிடியாக இருக்கிறது. இருந்தாலும், 19ந்தேதி சமரச பேச்சுவார்த்தை நடக்கவிருக்கிறது. அதில் உடன்பாடு ஏற்படவில்லை என்றால் அன்றிலிருந்து வேலைநிறுத்தம் தொடரும் என்றார்.

சி.ஐ.டி.யு. தலைவர் சவுந்திரராஜன் நிருபர்களிடம் கூறியதாவது:-

பஸ் ஊழியர்கள் பரீசிலித்த எங்கள் கூட்டமைப்பினர், நீதிமன்ற உத்தரவை ஏற்றுக்கொண்டு, அதைவிட முக்கியமாக பொதுமக்களின் சிரமங்களையும் கருத்தில்கொண்டு, பொங்கல் வருவதால் அதனையும் கருத்தில் கொண்டு, எங்கள் வேலைநிறுத்தத்தை ஒத்திவைப்பது என்று நாங்கள் முடிவெடுத்து உள்ளோம். 19ந்தேதியும் இதே கோரிக்கையைதான் வலியுறுத்துவோம். அந்த பேச்சுவார்த்தையில் அரசு தரப்பில் என்ன கூறுகிறார்கள் என்று பார்ப்போம். அதிலும் உடன்பாடு ஏற்படவில்லை என்றால் ஆர்பாட்டம், போராட்டம் போன்றவற்றை அமைதி வழியில் தொடருவோம். தேவைப்பட்டால் மீண்டும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

### 19-ந் தேதி பேச்சுவார்த்தை: அமைச்சர் பேட்டி

போக்குவரத்து தொழிலாளர்கள் பிரச்சினை குறித்து வரும் 19-ந்தேதி முத்தரப்பு பேச்சுவார்த்தை நடைபெறும் என்று அமைச்சர் சிவசங்கர் கூறியுள்ளார்.

போக்குவரத்து துறை அமைச்சர் சிவசங்கர் இன்று செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது: -

பொங்கல் நேரத்தில் பேருந்துகளை இயக்க வேண்டும் என்பதுதான் முதலமைச்சரின் உத்தரவு. தொழிற்சங்கங்கள் உயர்நீதிமன்றத்தில் தெரிவித்த கருத்துக்கள் முழுமையாக தெரியவில்லை. நீதிமன்றம் தெரிவித்த கருத்துக்களை முழுமையாக அறிந்தபின் கருத்து தெரிவிப்போம். நீதிமன்ற உத்தரவின்படி தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

வரும் 19-ந்தேதி மீண்டும் முத்தரப்பு பேச்சுவார்த்தை நடைபெற உள்ளது. அதன்பிறகு நல்ல முடிவு எடுக்கப்படும். நிதி நிலையை பொறுத்து கோரிக்கைகள் ஒவ்வொன்றாக நிறைவேற்றப்படும்.

இவ்வாறு அமைச்சர் சிவசங்கர் கூறினார்.

## அரசு கலைக்கல்லூரிகளில் உள்ள 4 ஆயிரம் உதவி பேராசிரியர் பணிகளுக்கு ஜூன் மாதம் தேர்வு

சென்னை, 11 ஜனவரி 2024: அரசு கலைக்கல்லூரிகளில் உள்ள 4 ஆயிரம் உதவி பேராசிரியர்கள் பணியிடங்களுக்கு ஜூன் மாதம் தேர்வு நடத்தப்படும் என்று ஆசிரியர் தேர்வு வாரிய ஆண்டு அட்டவணையில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.




தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தை (டி.என்.பி.எஸ்.சி.) போல ஆசிரியர் தேர்வு வாரியம், பள்ளிக்கல்வி, கல்லூரிக் கல்வித் துறைகளின் கீழ் காலியாக இருக்கும் ஆசிரியர்கள் உள்ளிட்ட சில பணியிடங்களுக்கான அறிவிப்புகளை வெளியிட்டு, அதற்கான தேர்வுகளை நடத்தி தகுதியானவர்களை நியமனம் செய்து வருகிறது.

அந்த வகையில் ஒவ்வொரு ஆண்டும் தொடக்கத்தில், அந்த ஆண்டில் எந்தெந்த பணியிடங்களில் காலியிடங்கள் எவ்வளவு இருக்கின்றன? அதற்கான அறிவிப்பு எப்போது வெளியாகும்? தேர்வு எப்போது நடத்தப்படும்? ஆகியவை அடங்கிய ஆண்டு அட்டவணையை ஆசிரியர் தேர்வு வாரியம் வெளியிட்டு, அதன் அடிப்படையில் நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன.

அதன்படி, 2024-ம் ஆண்டுக்கான உத்தேச ஆண்டு அட்டவணையை ஷ்ஷ்ஷ்.மீகூஷ்தீ.மீஸீ.ரீஷீஸ்.வீஸீ என்ற ஆசிரியர் தேர்வு வாரியத்தின் இணையதளத்தில் நேற்று வெளியிட்டு இருக்கிறது. அதில் உள்ள அறிவிப்புகளின் விவரம் வருமாறு:-

* 1,766 இடைநிலை ஆசிரியர் பணியிடங்களுக்கு இந்த மாதம் அறிவிப்புகள் வெளியிடப்பட்டு, ஏப்ரல் மாதத்தில் தேர்வு நடத்தப்பட உள்ளது.

* அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கல்லூரி கல்வியியல் ஆகியவற்றில் 4 ஆயிரம் உதவி பேராசிரியர் காலிப்பணியிடங்களுக்கு அடுத்த மாதம் (பிப்ரவரி) அறிவிப்பு வெளியிடப்பட்டு, ஜூன் மாதம் தேர்வு நடத்தப்படும்.

* தமிழ்நாடு ஆசிரியர் தகுதித்தேர்வு தாள்-ஞூ1, தாள் - ஞூ 2 ஆகியவற்றுக்கான அறிவிப்பு ஏப்ரலில் வெளியாகிறது. தேர்வு ஜூலை மாதம் நடத்தப்பட இருக்கிறது.

* 200 முதுநிலை உதவியாளர் பணியிடங்களுக்கு மே மாதம் அறிவிப்பு வெளியிடப்பட்டு ஆகஸ்ட் மாதத்தில் தேர்வு நடத்தப்படும்.

* முதலமைச்சர் கூட்டுறவு ஆராய்ச்சியாளர் பணியிடங்களில் உள்ள 120 இடங்களுக்கு ஜூன் மாதம் அறிவிப்பாணை வெளியாகிறது. செப்டம்பரில் அதற்கான தேர்வு நடத்தப்படுகிறது.

* மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சிலில் 26 மூத்த விரிவுரையாளர்கள், 103 விரிவுரையாளர்கள், 10 இளநிலை விரிவுரையாளர்கள் பணியிடங்களுக்கு செப்டம்பரில் அறிவிப்பு வெளியிடப்பட்டு, டிசம்பரில் தேர்வு நடத்தப்பட உள்ளது.

* அரசு சட்டக்கல்லூரியில் உள்ள 56 உதவி பேராசிரியர்கள் பணியிடங்களுக்கு நவம்பரில் அறிவிப்பாணை வெளியிடப்படுகிறது. தேர்வை பொறுத்தவரையில், அடுத்த ஆண்டு (2025) பிப்ரவரி மாதம் நடத்தப்படுகிறது. இவ்வாறு அந்த அட்டவணையில் கூறப்பட்டுள்ளது.




PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# சென்னை புத்தகக் கண்காட்சியில் பரபரப்பாக விற்பனை ஆகும் ‘அன்புடன் ரமேஷ்‘ புத்தகம் அமேசான் மற்றும் ஃபிளிப்கார்ட்டிலும் கிடைக்கிறது

## நேர்வழியில் குறுகிய காலத்தில் பெரும் வெற்றி பெறுவது எப்படி என்பதற்கான எளிய வழிகளை புத்தகம் மூலம் இளைஞர்களுக்கு சொல்லும் நடிகர் ரமேஷ் அரவிந்த்

சென்னை, 11 ஜனவரி **2024:** தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளம், ஹிந்தி என சுமார் 150 திரைப்படங்களில் நடித்தவரும் திரைக்கதை ஆசிரியர், இயக்குநர், தொலைக்காட்சி நிகழ்ச்சித் தொகுப்பாளர் என்று பன்முகம் கொண்டவருமான ரமேஷ் அரவிந்த் ஒரு ஊக்கமூட்டும் பேச்சாளர் மற்றும் எழுத்தாளரும் கூட.

கர்நாடகா முழுவதும் உள்ள பெருநிறுவனங்களின் பணியாளர்கள் மற்றும் உயர் பதவிகளில் உள்ளவர்களுக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் ஊட்டும் பேச்சுக்கள், பயிற்சிகளை வழங்கி வரும் ரமேஷ் அரவிந்த், கல்வி, வாழ்க்கை, பணி, மற்றும் தொழிலில் வெற்றி பெறுவது குறித்த புத்தகங்களையும் எழுதி வருகிறார்.

இந்த வரிசையில் இவர் எழுதியுள்ள 'அன்புடன் ரமேஷ்' என்ற புத்தகம் சமீபத்தில் வெளியாகி சென்னை புத்தகக் கண்காட்சியில் தற்போது பரபரப்பாக விற்பனை ஆகி வருகிறது. சவன்னா பதிப்பகம் வெளியிட்டுள்ள இந்த புத்தகம் அகநாழிகை அரங்குகளான 520 மற்றும் 521-ல் கிடைக்கும். மேலும் அமேசான் மற்றும் ஃப்ளிப்கார்ட் ஆகிய மின் வணிக தளங்களிலும் கிடைக்கும்.



ரமேஷ் அரவிந்த் வழங்கிய ஊக்கமூட்டும் பேச்சுகளின் முக்கிய மற்றும் சுவாரஸ்யமான பகுதிகளின் தொகுப்பான இந்த புத்தகம், 'ப்ரிதியிந்த ரமேஷ்' என்ற பெயரில் கன்னடாவில் வெளியாகி ஆறே மாதங்களில் ஏழு பதிப்புகள் என பெரும் வெற்றி பெற்ற புத்தகத்தின் தமிழ் பதிப்பாகும். கே. நல்லதம்பி இதை சிறப்பான முறையில் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

புத்தகம் குறித்து பேசிய ரமேஷ் அரவிந்த், "ஒருவர் வாழ்க்கையிலும் தொழில் அல்லது பணியிலும் வெற்றி பெற்று செல்வந்தராக உயர□ 20 முதல் 30 ஆண்டுகள் வரை ஆகும் என்று நம்பப்படுகிறது. ஆனால் சில மாற்றங்களை செயல்படுத்தி, வியூகங்கள் வகுத்து அதற்கு ஏற்ப உழைத்தால் 6 முதல் 8 ஆண்டுகளிலேயே இலக்குகளை அடைந்து விடலாம். இந்த மாற்றங்கள், வியூகங்கள் மற்றும் உழைப்பு குறித்தும், நேர்வழியில் விரைவில் வெற்றி பெறுவதற்கான சூட்சுமங்கள் குறித்தும் இந்த புத்தகத்தில் கூறியுள்ளேன்," என்றார்.

தொடர்ந்து பேசிய அவர், "நம்முடன் பணியாற்றுபவர்களையும் நமது குடும்பத்தினரையும் நமது சிறு செயல்கள் மூலமே உற்சாகப்படுத்தி விடலாம். இதன் மூலம் நமது பணியிடத்திலும், வீட்டிலும் மகிழ்ச்சி நிலவும். இது குறித்தும் எனது சொந்த வாழ்க்கை அனுபவங்களில் இருந்து எடுத்துரைத்துள்ளேன்," என்று தெரிவித்தார்.

'அன்புடன் ரமேஷ்' புத்தகம் மாணவர்களுக்கும் இளைஞர்களுக்கும் வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கு உதவிகரமாக இருக்கும் என்றும் திறமைகளை எப்போதும் உரிய முறையில் அங்கீகரிக்கும் தமிழக மக்கள் இந்த புத்தகத்தையும் வாங்கி, படித்து பாராட்டுவார்கள் என்று தான் நம்புவதாகவும் ரமேஷ் அரவிந்த் கூறினார்.

# கோலாகலத் திருவிழாவாக மாறிய ‘உழவன் ஃபவுன்டேஷனின் உழவர் விருதுகள் 2024’ - விவசாயத்துறையில் சாதனை படைத்த 5 ஆளுமைகளுக்கு கவுரவம்..!!

சென்னை, 11 ஜனவரி **2024:** விவசாயத்தில் சாதனை புரிபவர்களையும், அதற்கு உறுதுணையாக இருந்து பங்களிப்பவர்களையும் கௌரவப்படுத்தி அங்கீகரிக்கும் உழவன் ஃபவுன்டேஷனின் ‘உழவர் விருதுகள் 2024’ விழா கோலகலமாக சென்னையில் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினர்களாக நடிகரும் ஓவியருமான சிவகுமார், நடிகை ரோகிணி, நடிகர் மற்றும் இயக்குநர் தம்பி ராமையா, நடிகர் பசுபதி மற்றும் நடிகை கீர்த்தி பாண்டியன் கலந்துக் கொண்டார்கள்.

இவர்களோடு மருத்துவர் கு.சிவராமன், பேராசிரியர் சுல்தான் அஹ்மது இஸ்மாயில், வேளாண் செயற்பாட்டாளர் பாமயன் மற்றும் ஓ எஃப் எம் அனந்து ஆகியோரும் கலந்துக் கொண்டார்கள். மேலும் இந்நிகழ்வில் வேளாண் துறைசார் வல்லுநர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலரும் கலந்துக் கொண்ட இந்த விழா இனிதே நடைபெற்றது.

இதில்

- உழவர்களின் விளைப் பொருட்களுக்கு நல்ல விலை பெற்று தரும் மதுரை, திருமங்கலம் ஒழுங்கு முறை விற்பனை கூட கண்காணிப்பாளர் திருமிகு. வெங்கடேஷ் அவர்களுக்கு உழவர்கள் மேம்பாட்டிற்கான சிறந்த பங்களிப்புக்கான விருதும்
- விவசாயிகளை பற்றியும் அவர்கள் விளைப் பொருட்கள் பற்றியும் முக்கியமாக பெண் விவசாயிகள் பற்றியும் தொடர்ச்சியாக எழுதி வரும் திருமிகு. அபர்ணா கார்த்திகேயன் அவர்களுக்கு சிறந்த வேளாண் ஊடகவியலாளருக்கான விருதும்
- நிலமற்ற பெண்கள் ஒன்றிணைந்து தரிசு நிலத்தை ஒரு கூட்டுப் பண்ணையாக மாற்றிய பள்ளூர் நிலமற்ற விவசாயப் பெண்கள் சங்கத்திற்கு சிறந்த உழவர் கூட்டமைப்புக்கான விருதும்
- பழங்குடி மக்களுக்காக அறவழியில் போராடி தனி குடியிருப்பும் அவர்களின் வேளாண் பொருட்களுக்கு நல்ல விலையும் கிடைக்க தொடர்ந்து பங்காற்றி வரும் பழங்குடி சமூகப் பெண் திருமிகு. ராஜலெட்சுமி அவர்களுக்கு, வனம் சார்ந்த மக்களின் வேளான் மேம்பாட்டிற்கான சிறந்த பங்களிப்புக்கான விருதும்
- பல்வேறு நீர் நிலைகளை சீரமைக்க பெரும் பங்காற்றிய திருமிகு. சித்ரவேல் அவர்களுக்கு நீர் நிலைகள் மீட்டெடுத்தலுக்கான ஆகச் சிறந்த பங்களிப்புக்கான விருது வழங்கும் கௌரவிக்கப்பட்து.



ஒவ்வொரு ஆண்டையும் போலவே இந்த ஆண்டும் விருதாளர்கள் ஒவ்வொருவருக்கும் விருதோடு ஒரு லட்ச ரூபாய்க்கான காசோலையும் வழங்கப்பட்டது.

இந்த விழாவில் நடிகரும் உழவன் ஃபவுண்டேஷன் நிறுவனருமான கார்த்தி அவர்கள் பேசும் போது, “ஒவ்வொரு ஆண்டும் விவசாயிகள் பொங்கல் வைத்து இயற்கைக்கும், கால்நடைகளுக்கும் நன்றி சொல்கிறார்கள். அந்த நாளைத்தான் நாம் பொங்கல் திருநாளாக கொண்டாடுகிறோம். ஆனால், நாம் தினம் உண்ணும் உணவை வழங்கும் விவசாயிகளுக்கு நன்றி கூற மறந்துவிடுகிறோம். அவர்களுக்கு என்றென்றுமே நன்றி கூற வேண்டும். பொங்கல் அன்று மட்டுமே விவசாயிகளை நினைக்கக் கூடாது.

சினிமா, விளையாட்டு உள்ளிட்ட அனைத்திலுமே வெற்றி பெறும் போது விழா வைத்துக் கொண்டாடுகிறோம். எவ்வளவு பெரிய இயற்கை பேரிடர் நிலையிலும் நமக்கான உணவை உற்பத்தி செய்து தரும் விவசாயிகளைக் கொண்டாட வேண்டும் என்று தான் உழவர் விருதுகள் விழாவினைத் தொடங்கினோம்.

இது 5-வது ஆண்டு விழா. பல்வேறு வேளாண் சாதனையாளர்களுக்கு விருதுகள் வழங்கி கௌரவித்திருப்பது பெருமையாக இருக்கிறது. இந்த விருதின் மூலம் அவர்களுடைய வாழ்வில் ஒரு சிறு வெளிச்சத்தை ஏற்படுத்தி விடமுடியும் என்று நம்புகிறோம்.

வரும் காலங்களிலும் இதுப்போல விவசாயத்திற்கும், விவசாயிகளுக்கும் உறுதுணையாக இருக்கும் நல் உள்ளங்களை அடையாளப்படுத்தி கௌரவப்படுத்துவதோடு, விவசாயத்திற்கான பங்களிப்பையும் உழவன் ஃபவுண்டேஷன் தொடர்ந்து செய்யும் எனவும் கூறினார்.

வேளாண் பிரச்சினைகள், வேளாண் தொழில்நுட்பங்கள், சிறுதானியங்கள், காலநிலை மாற்றங்கள், பூச்சிக்கொல்லி பயன்பாடுகள் என விவசாயத்தை பற்றியும் அதைச் சார்ந்த உணவு, தொழில்நுட்பங்கள் என ஒரு முழுமையான புரிதல் ஏற்படுத்தும் நிகழ்ச்சியாக இவ்விருதுகள் வழங்கும் விழா அமைந்தது.

இந்த சிறப்பம்சங்கள் இன்னும் பல கோடி பேரை சென்று சேரும் பொருட்டு, உழவன் ஃபவுன்டேஷனின் ‘உழவர் விருதுகள் 2024’ விழா, ஜனவரி 15, தமிழர் திருநாளான பொங்கல் தினத்தன்று, ஸ்டார் விஜய் தொலைக்காட்சியில் மதியம் 2.30 மணி முதல் 5.30 மணி வரை சிறப்பு நிகழ்ச்சியாக ஒளிபரப்பாகவுள்ளது.

# டயர்கள் ரோலிங் ரெசிஸ்டன்ஸ் அளவீடு செய்யும் உலகின் முதல் திறன் சோதனை வழங்குனராக எச்எஎஸ்ஈடிஆர்ஐ, என் ஏ பி எல் ஆல் சான்றளிக்கப்பட்டது

சென்னை, 11 ஜனவரி **2024:** ஹரிசங்கர் சிங்கானியா எலாஸ்டோமர் அண்ட் டயர் ரிசெர்ச் இன்ஸ்ட்டியூட் (எச்எஎஸ்ஈடிஆர்ஐ), தேஷனல் அக்ரெடிடேஷன் போர்டு ஃபார் டெஸ்டிங் அண்ட் கேலிபிரேஷன் லாபரட்டரீஸ் (என் ஏ பி எல்) ஆல் ரோலிங் ரெசிஸ்டன்ஸ் சோதனைகளுக்கான உலகின் முதல் திறன் சோதனை வழங்குநராக (ப்ரொபிசியன்ஸி டெஸ்டிங் ப்ரோவைடர் பி டி பி) அங்கீகாரம் பெற்றது. ஐ எஸ் ஓ 17043:2010 தரநிலைகளின்படி சி1 (பயணிகள் கார் டயர்கள்), சி2 (இலகுரக டிரக் டயர்கள்) மற்றும் சி3 (கனரக டிரக் டயர்கள்) ஆகிய மூன்று முக்கிய வகைகளின் சோதனைக்காக இந்த பிரத்யேக சான்றிதழ் வழங்கப்படுகிறது. எச்எஎஸ்ஈடிஆர்ஐ இல் உள்ள வேதியியல் மற்றும் இயந்திரவியல் துணைப் பிரிவுகளின் கீழ் பல்வேறு அளவுருக்களின் மதிப்பீடுகளின் அடிப்படையில் இந்த அங்கீகாரம் வழங்கப்படுகிறது.

நவம்பர் 30, 2023 முதல் நவம்பர் 29, 2025 வரை செல்லுபடியாகும் இந்த குறிப்பிடத்தக்க சான்றளிப்பு, மீட்சியுறுவடிவம் மற்றும் டயர் ஆராய்ச்சித் துறையில் சிறந்து விளங்குவதற்கான அதன் உறுதிப்பாட்டை வலுப்படுத்துகின்ற வகையில் எச்எஎஸ்ஈடிஆர்ஜ ஐ திறன் சோதனை ஆற்றலில் முன்னணியில் நிலைநிறுத்துகிறது. தயாரிப்பு செயல்திறன் மற்றும் வடிவமைப்பு சுழற்சி நேரத்தை உகந்ததாக்குவதற்கு உருவகப்படுத்துதல் மற்றும் கணிப்பு நுட்பங்களைப் பயன்படுத்துவதில் எச்எஎஸ்ஈடிஆர்ஜ இன் அர்ப்பணிப்பை இந்த சாதனை எடுத்துக்காட்டுகிறது.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வில் பேசிய எச்எஎஸ்ஈடிஆர்ஜ இன் தலைவர் டாக்டர் ரகுபதி சிங்கானியா, " ஒரு திறன் தேர்வு வழங்குநராக அங்கீகாரம் வென்றதில் எச்எஎஸ்ஈடிஆர்ஜ இன் வெற்றியானது, தரம் மற்றும் புதுமைக்கான எங்கள் தொடர்ச்சியான முயற்சிக்கு ஒரு சான்றாக இருக்கிறது. இந்த அங்கீகாரம் ஆனது, எங்கள் ஆய்வகத்தின் வலுவான பிரதிபலிப்பாக இருக்கிறது மேலும் ஒட்டுமொத்த பணியாளர்களின் திறன் மற்றும் சோதனை முடிவுகளின் சக குழு ஒப்பீடுகளை அனுமதிக்கும் துறைகளில் உலகத் தரத்தை மேம்படுத்துவதற்கான நோக்கத்தில் எங்கள் குழுவின் அர்ப்பணிப்பாக இருக்கிறது. விஞ்ஞானிகள் மற்றும் பொறியாளர்களின் ஒரு அர்ப்பணிப்புள்ள ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு குழுவைக் கொண்ட எங்கள் நிறுவனம், இந்தியாவில் டயர் மற்றும் இதர ரப்பர் தயாரிப்புகளுக்கான தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதில் ஆழ்ந்த ஈடுபாட்டுடன் உள்ளது."என்று கூறினார்.

திறன் சோதனை வழங்குநர்களுக்கான (பி டி பி) இந்த அங்கீகாரச் சேவைகள், சோதனை, அளவுத்திருத்தம், மருத்துவம் மற்றும் ஆய்வு உள்ளிட்ட துறைகளின் ஒரு வரம்பில் வழங்கப்படுகின்றன. இந்த செயல்முறையானது, சர்வதேச தரநிலைகளுக்கு இணங்க, வெளி தரப்பினரால் நடத்தப்படும் மதிப்பீடுகள் மூலம், குறிப்பிட்ட சோதனைகள் அல்லது அளவீடுகளுக்கான தொழில்நுட்ப நிபுணத்துவத்தின் ஒரு முறையான அங்கீகாரத்தை உள்ளடக்கியது. அங்கீகாரத்தின் கீழ் வருகின்ற ஆய்வகத்தின் திறனை மதிப்பிடுவதற்கான தேசிய அங்கீகார அமைப்புகளுக்கான மதிப்பீட்டு கருவிகளில் இதுவும் ஒன்றாகும்.

எச்எஎஸ்ஈடிஆர்ஜ என்பது, கர்நாடகா, மைசூருவில் அமைந்துள்ள இந்தியாவில் உள்ள ஒரு சுயாதீன ஆராய்ச்சி மற்றும் சோதனை ஆய்வகமாகும், மேலும் இது இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் (டி எஸ் டி) கீழ் ஒரு அறிவியல் தொழில்துறை ஆராய்ச்சி நிறுவனமாக (எஸ் ஐ ஆர் ஓ) அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இது ஐ எஸ் ஓ/மிணிசி 17025:2017 தரநிலையின்படி ரப்பர் மற்றும் ரப்பர் தயாரிப்புகளின் இரசாயன, இயந்திர சோதனைக்கான ஒரு அங்கீகாரம் பெற்ற ஆய்வகமாகும். இந்த நிறுவனம், ரப்பர் மற்றும் அதைச் சார்ந்த தொழில்களுக்கான தொழில்நுட்ப மனிதவளம் மற்றும் அதிநவீன தொழில்நுட்பங்களின் முன்னேற்றத்திற்கு பங்களித்து, தர சோதனையில் உலகத்தரம் வாய்ந்த அங்கீகாரத்தைப் பெற்று சிறந்து விளங்க தொடர்ந்து பாடுபடுகிறது.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# "இமெயில் வந்த பிறகு மரங்களை வெட்டுவது குறைந்து விட்டது" ; இயக்குநர் கே.பாக்யராஜ்

# "இளைஞர்களை செருப்படியில் இருந்து காப்பாற்றியது இமெயில்" ; கே.பாக்யராஜ் கூறிய புதிய தகவல்

## "மைதானங்களில் விளையாடி பொழுதை கழிப்பது இன்றைய இளைஞர்களிடம் குறைந்துவிட்டது" ; நடிகை கோமல் சர்மா ஆதங்கம்

## "கேம் என்றாலே பிரச்சினைதான்" ; இமெயில் பட நிகழ்ச்சியில் நடிகை வனிதா விஜயகுமார் பேச்சு

## "புதிய திரைப்பட நகரத்திற்கு கலைஞரின் பெயரை சூட்ட வேண்டும்" ; இமெயில் பட நிகழ்ச்சியில் தயாரிப்பாளர் கே.ராஜன் கோரிக்கை




சென்னை, 11 ஜனவரி 2024: எஸ் ஆர் பிலிம் பேக்ட்ரி சார்பில் எஸ் ஆர் ராஜன் தயாரித்து இயக்கியுள்ள படம் 'இமெயில்'. இப்படத்தில் கன்னட திரையுலகின் முன்னணி நடிகை ராகினி திவிவேதி கதாநாயகியாக நடிக்க, கதாநாயகனாக 'முருகா' அசோக்குமார் நடித்துள்ளார். இரண்டாவது கதாநாயகியாக போஜ்புரி மற்றும் ஹிந்தி படங்களில் நடித்து புகழ்பெற்ற ஆர்த்தி ஸ்ரீ நடிக்க, இரண்டாவது கதாநாயகனாக ஆதவ் பாலாஜி நடித்துள்ளார். இப்படம் ரிலீஸுக்கு தயாராகி வரும் நிலையில் இப்படத்தின் பிரீ ரிலீஸ் நிகழ்ச்சி நேற்று மாலை சென்னை சாலிகிராமம் பிரசாத் லேபில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் இயக்குனர் கே.பாக்யராஜ், தயாரிப்பாளர்கள் கே.ராஜன், மதுராஜ், நடிகர்கள் அருள்தாஸ், நடிகை வனிதா விஜயகுமார், கோமல் சர்மா, ரத்னா, லொள்ளு சபா மனோகர், சிதம்பரம், ஆரஞ்சு மிட்டாய் பிரபா, முத்துக்குமார், இந்திய தயாரிப்பாளர்கள் சங்க தலைவரும் நிறுவனருமான சாலமன், சமூக சொற்பொழிவாளர் முகிலன், தொழிலதிபர்கள் எஸ்.ஆர் பாபு, ராஜசேகர் உள்ளிட்ட பல இன்னும் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் படத்தின் இரண்டாவது நாயகன் ஆதவ் பாலாஜி பேசும்போது, "இன்று சிறிய படங்களுக்கு திரையரங்குகள் கிடைப்பது கடினமாக இருக்கிறது. சங்கத்தில் உறுப்பினராக ஆனாலும் கூட என்னை போன்றவர்களை ஒதுக்கி தான் பார்க்கிறார்கள். என்னுடைய முதல் படம் மெய் நன்றாக இருந்தும் தியேட்டர்கள் கிடைக்கவில்லை. இந்த படத்தில் தயாரிப்பாளராக இருந்து இயக்குநராகி இருக்கும் எஸ்.ஆர் ராஜன் இந்த படத்தின் கதை மீது எனக்கு நம்பிக்கை இருக்கிறது என்று உறுதியாக நம்புகிறார். இவர் வெற்றி பெற்றால் இன்னும் பல புதுமுகங்களுக்கு வாய்ப்பு கிடைக்கும்" என்று கூறினார்.

சமூக சொற்பொழிவாளர் முகிலன் பேசும்போது, "இந்த படத்தின் தலைப்பு ஆங்கிலத்தில் இருந்தாலும் சொல்லாடல்கள் சரியாக இருக்கின்றன. இந்த தலைப்பு வைத்ததன் மூலம் இன்றைய இளைய தலைமுறைக்கு இந்த கதை போய் சேரவேண்டும் என்பதில் இயக்குனர் எஸ்.ஆர் ராஜன் கவனமாக இருக்கிறார்" என்று கூறினார்.

"தயாரிப்பாளரும் இயக்குனருமான மதுராஜ் பேசும்போது, "படம் துவங்கும்போது தயாரிப்பாளர் எஸ்.ஆர் ராஜனுடன் நிறைய பேர் கூடவே இருந்தார்கள். ஆனால் படம் முடியும்போது அவர் தனி மரமாக இருந்ததை நான் கண்கூடாக பார்த்தேன். இந்த படத்தை பார்த்தபோது சொல்ல வந்ததை சரியாக சொல்லியிருக்கிறார் என்பது தெரிகிறது. அரசியலுக்கு பேச்சாற்றல் எப்படியோ அதுபோல திரையுலகுக்கு எழுத்தாற்றல் முக்கியம். அது இயக்குநர் எஸ் ஆர் ராஜனிடம் நிறையவே இருக்கும் என நம்புகிறேன்" என்று கூறினார்.

நடிகை வனிதாஸ்ரீ பேசும்போது, "இதுதான் எனக்கு முதல் படம். இந்த படத்தில் நடிகர் மனோபாலாவுடன் இணைந்து நடித்துள்ளேன். இந்த படம் எனக்கு ஒரு திருப்புமுனையாக இருக்கும் என நம்புகிறேன்" என்று கூறினார்,

நடிகை கோமல் சர்மா பேசும்போது, "தொழில்நுட்பம் தற்போது வளர்ந்து விட்டது ரொம்ப நல்ல விஷயம் தான். யூட்யூப் மூலமாக கல்வியில் கூட நிறைய பாடங்களை நாம் கற்றுக் கொள்ள முடியும். மனித இனத்திற்கு தொழில்நுட்பம் நிறைய நல்லது செய்திருந்தாலும் இன்றைய இளைஞர்கள் பலர் ஆன்லைன் விளையாட்டுக்களில் பொழுதை கழிக்கின்றனர். மைதானங்களுக்கு சென்று சக நண்பர்களுடன் விளையாடி பொழுதை கழிப்பது இப்போது குறைந்து விட்டது. தொழில்நுட்பத்தை இன்றைய இளைஞர்கள் நல்லபடியாக பயன்படுத்தினால் நிறைய கல்பனா சாவ்லாக்கள், அப்துல் கலாம்கள் உருவாவதற்கு வாய்ப்பு அதிகம் இருக்கிறது. அந்த வகையில் இயக்குநர் எஸ்.ஆர் ராஜன் இன்றைக்கு தேவையான ஒரு விஷயத்தை கையில் எடுத்திருக்கிறார்" என்று கூறினார்.

நாயகன் அசோக் குமார் பேசும்போது, "இந்தப் படத்தின் முதுகெலும்பு என்றால் அது இயக்குநர் எஸ்.ஆர் ராஜன் ஒருவர் தான். இமெயில் என்றால் ஆன்லைன் விளையாட்டு, சூதாட்டம் இவற்றினால் ஏற்படும் பாதிப்புகள் ஆகியவற்ற மையப்படுத்தி ஒரு அழகான திரைக்கதையை நிறைய திருப்பங்களுடன் அவர் அமைத்துள்ளார். இந்த படத்தின் சண்டைக் காட்சிகளுக்காக ஜாக்கிசான் மற்றும் குங்பூ படங்களிலிருந்து குறிப்புகளை எடுத்து வடிவமைத்தார்கள். நேபாளத்திலிருந்து வந்த பீர் மாஸ்டர் என்பவர் இந்த சண்டை பயிற்சியை கவனித்தார். சண்டையின்போது எனது காது கிழிந்து விட்டது. மக்களிடம் இந்த படம் போய் சேரும்போது அந்த வலியெல்லாம் பெரிதாக தெரியாது. இயக்குநர் ராஜனின் இந்த துணிச்சலுக்கு எனது வாழ்த்துக்கள்" என்று கூறினார்.

நடிகை வனிதா விஜயகுமார் பேசும்போது, "இந்த தலைப்பிற்கு பெரிய ஈர்ப்பு இருக்கிறது. இமெயில் என்றாலே இன்று எல்லோருக்கும் தெரியும். இந்தப்படம் ஒரு கேமை மையப்படுத்தி உருவாகி இருக்கிறது என்பது தெரிகிறது. கேம் என்றாலே பிரச்சினைதான். அது பிக்பாஸ் கேமாக இருந்தாலும் சரி, போனில் இருக்கும் கேமாக இருந்தாலும் சரி எந்த கேமாக இருந்தாலும் அதில் நிச்சயமாக நமது மனது ஈடுபடத்தான் செய்யும். நாம் என்னதான் விளையாட்டிற்குள் சென்றாலும் கூட நமது மனதை பாதுகாப்பாக தற்காத்து வைக்க வேண்டும். ஆனால் அது இந்தக்கால தலைமுறையினரிடம் மிகவும் குறைவாக இருக்கிறது. பிறந்த குழந்தையின் கையில் செல்போனை கொடுத்து விடுகிறார்கள். அவர்களுக்கு நம்மை விட எல்லாமே அதிகமாக தெரிகிறது. எனது மூன்று வயது மகள் கூட மொபைல் மூலமாக ஆன்லைனில் பணம் கட்டும் அளவிற்கு வளர்ந்து விட்டாள். அதே சமயம் குழந்தைகளுக்கு எதை எவ்வளவு சொல்லிக் கொடுக்க வேண்டும், எதில் அவர்கள் கவனத்தை திருப்ப வேண்டும் என்பதை பெரியவர்கள் தான் தீர்மானிக்க வேண்டும். இந்த படத்தில் அதைத்தான் சொல்லி இருக்கிறார்கள் என நினைக்கிறேன்" என்று கூறினார்.

இமெயில் படத்தின் தயாரிப்பாளரும் இயக்குநருமான எஸ்.ஆர் ராஜன் பேசும்போது, "இது ஒரு சஸ்பென்ஸ் திரில்லர் படம். இதில் ஆக்சன், காமெடி, செண்டிமெண்ட் எல்லாமே இருக்கிறது. இரண்டு பாடல்கள், மூன்று சண்டை காட்சிகள் உள்ளது. மும்பை, கோவா, தமிழ்நாடு, கர்நாடகா, பாண்டிச்சேரி என ஐந்து மாநிலங்களில் இந்த படத்தின் படப்பிடிப்பை நடத்தி உள்ளேன். இந்த படம் ஒரு ஆன்லைன் கேம் மோசடி பற்றிய கதை" என்று கூறினார்.

தயாரிப்பாளர் கே.ராஜன் பேசும்போது, "இதை ஒரு சுமாரான படம் என்று நினைத்து தான் வந்தேன். ஆனால் இங்கே காட்சிகளை பார்த்தபோது ரிச் ஆகவே எடுத்து இருக்கிறார்கள். ஒரு மசாலா படம் குஜாலா இருக்கிறது. இந்த படத்தில் கதாநாயகியாக நடித்துள்ளவர் இங்கே வரவில்லை. கதாநாயகிகள் படத்தை புரமோஷன் பண்ணுவதற்காக மட்டுமல்ல அவர்களையே புரமோஷன் பண்ணிக் கொள்வதற்காக இது போன்ற நிகழ்ச்சிகளுக்கு வரவேண்டும். வேறு படங்களில் நடித்துக் கொண்டிருப்பதால் வரவில்லை என்றால் அதை ஏற்றுக் கொள்ளலாம். இருந்தாலும் அவர்களையும் கேட்டு இதுபோன்று தேதிகளை முடிவு செய்ய வேண்டும். சமீபகாலமாக சின்ன பட்ஜெட்டில் எடுக்கப்பட்ட பல படங்கள் பெரிய படங்களாக மாறி இருக்கின்றன. தரமணி திரைப்பட நகரத்தை மூடியபோது சிறிய படங்கள் எல்லாம் பாண்டிச்சேரிக்கும் பெரிய படங்கள் எல்லாம் ஹைதராபாத்திற்கும் கிளம்பி சென்றனர். அதனால் அவற்றை திறக்க வேண்டும் என்று கலைஞரிடமும் கடந்த வருடம் முதல்வர் மு.க ஸ்டாலினிடமும் கோரிக்கை வைத்தேன். சமீபத்தில் நடைபெற்ற கலைஞரின் நூற்றாண்டு விழாவில் முதல்வர் மு.க ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு பூந்தமல்லி அருகில் 140 ஏக்கரில் 500 கோடி செலவில் திரைப்படம் நகரம் அமைக்கப்படும் என அறிவிப்பு வெளியிட்டு நம்மை மகிழ்ச்சிப்படுத்தியுள்ளார். சிறு முதலீட்டு தயாரிப்பாளர்கள் இதை மனதார வரவேற்கிறோம்.

கடந்த பத்து வருடங்களாகவே தமிழ் சினிமாவில் சிறு முதலீட்டு பட தயாரிப்பாளர்களுக்கு சோதனைகள், கஷ்டங்கள். வேதனைகள் தொடர்ந்து வருகின்றன. இந்த திரைப்பட நகர் உருவாகிவிட்டால் நிச்சயமாக தயாரிப்பு செலவில் ஒரு 40 சதவீதம் மிச்சமாகும். அந்த திரைப்பட நகருக்கு டாக்டர் கலைஞரின் பெயரை வைக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். விஞ்ஞான வளர்ச்சி வேண்டும். ஆனால் அது உயிரை பறிப்பதாக இருக்கக் கூடாது என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். இது ஆன்லைன் விளையாட்டில் ஈடுபாடு கொண்டு அந்த மோகத்தில் இருக்கும் நபர்களை நல்வழிப்படுத்தும் படமாக இருக்கும் என நம்புகிறேன்" என்று கூறினார்.

இயக்குனர் கே.பாக்யராஜ் பேசும்போது, "சிறு பட தயாரிப்பாளர்கள் கஷ்டப்படுகிறார்கள் என்பதை தயாரிப்பாளர் ராஜன் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார். நானும் கூட அவ்வப்போது இதுபற்றி கூறி வருகிறேன். ஒரு வளாகத்தில் நான்கு திரையரங்குகள் இருந்தால் அதில் ஒன்றை கட்டாயம் சிறுபட வெளியீட்டுக்காக கொடுக்க வேண்டும் என ஒரு சட்டமே கொண்டு வர வேண்டும். நிறைய திரையரங்குகள் கொடுத்தால் தானே மக்கள் வந்து படத்தை பார்த்து பாராட்டுவார்கள். இந்த படத்தின் நாயகன் அசோக் உண்மையிலேயே அதிர்ஷ்டசாலி. ரொம்பவே கொடுத்து வைத்தவர். படத்தில் அவரது காட்சிகளை பார்க்கும்போது கண்கொள்ளாக் காட்சியாக தெரிந்தது. அதுமட்டுமல்ல இந்த படத்தில் சண்டை காட்சிகளை நன்றாக நடித்துள்ளார்.

படம் முடியும்போது இந்த படத்தின் தயாரிப்பாளரை தனிமரமாக விட்டு விட்டார்கள் என்று சொன்னார்கள். கட்டாயம் சோதனைகள் வரும். சோதனை வந்தால் தான் நல்லது. அதையெல்லாம் தாண்டி தான் சந்தோசத்தை அனுபவிக்க முடியும். இமெயில் வருவதற்கு முன்பு எல்லாவற்றையும் பேப்பரில் தான் எழுதி அனுப்பி கொண்டிருந்தோம். இமெயில் வந்த பிறகு பேப்பரின் தேவை குறைந்து விட்டது. அதனால் மரங்களை வெட்டுவதும் குறைந்து இயற்கையும் பாதுகாக்கப்பட்டது. அதுமட்டுமல்ல நிறைய இளைஞர்கள் செருப்படியில் இருந்து தப்பித்துக் கொள்வதற்கும் ஒரு வாய்ப்பு கிடைத்தது. ஏனென்றால் முன்பெல்லாம் ஒரு பெண்ணிடம் காதலை சொல்ல லவ் லெட்டர் கொடுத்து, அந்தப் பெண் உடனே கோபமாகி செருப்பை கழட்டுவார். இந்த இமெயில் வந்தவுடன் அந்த அவசியம் இல்லாமல் போய்விட்டது. இதற்கு மட்டுமல்ல.. சில பெரிய மனிதர்களிடம் கூட தடுமாற்றம், பயம் காரணமாக நாம் சொல்ல முடியாத விஷயங்களை சொல்வதற்கு இந்த இமெயில் உதவுகிறது. ஆன்லைனில் தான் மோசடி நடக்கிறது என்றில்லை. ராஜன் சார் சொன்னது போல படப்பிடிப்பு நடித்த அனுமதி வாங்கி சென்றாலும் அந்த இடத்தில் இருப்பவர்கள் லஞ்சம் கேட்பார்கள்.. அங்கே ஒரு தனி யூனியன் வைத்திருப்பார்கள்.. அதன் மூலம் தயாரிப்பாளர்களுக்கு தொல்லை கொடுப்பார்கள். அந்த மாதிரி கண்ணுக்கு தெரிந்து நிறைய மோசடிகள் நாட்டில் நடக்கிறது. தனி மனிதனாக பார்த்து திருந்தினால் மட்டுமே போன்ற மோசடிகள் நடப்பதற்கான வாய்ப்புகள் குறையும்" என்று கூறினார்.

இப்படத்தில் மறைந்த நடிகர் மனோபாலா மற்றும் லொள்ளு சபா மனோகர், வனிதாஸ்ரீ உள்ளிட்டோர் முக்கிய வேடங்களிலும் பில்லி முரளி வில்லனாகவும் நடித்துள்ளனர். அவினாஷ் கவாஸ்கர் இப்படத்திற்கு இசையமைக்க திரவுபதி புகழ் ஜுபின் பின்னணி இசை மேற்கொண்டு இருக்கிறார். கன்னட சினிமாவில் கிட்டத்தட்ட 30 படங்கள் பணியாற்றிய அனுபவம் கொண்ட செல்வம் முத்தப்பன் இப்படத்தின் ஒளிப்பதிவை கவனித்துள்ளார். வேலையில்லா பட்டதாரி உள்ளிட்ட படங்களில் பணியாற்றிய ராஜேஷ் குமார் இப்படத்தின் படத்தொகுப்பை மேற்கொண்டுள்ளார்.

தமிழ், கன்னடம் என இரு மொழிகளில் இப்படம் தயாராகி உள்ளது.

"printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor R.SATHYANARAYANAN"

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# சென்னை மஹிந்திரா வேர்ல்ட் சிட்டி, தமிழ்நாடு அரசுடன் ரூ 1,000 கோடி யின் முதலீடுகளை செயல்படுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுகிறது

சென்னை, 11 ஜனவரி 2024: மஹிந்திரா வேர்ல்ட் சிட்டி டெவலப்பர்ஸ் லிமிடெட் (எம் டபிள்யூ சி டி எல்) அடுத்த ஐந்தாண்டுகளில் ரூ. 1,000 கோடிக்கும் அதிகமான முதலீடுகளை செயல்படுத்தவும், வசதி செய்யவும், தமிழ்நாடு அரசுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (எம் ஒ யூ) கையெழுத்திட்டுள்ளது. இதன் மூலம் தமிழ்நாடு மாநிலத்தில் 2,000க்கும் மேற்பட்டோருக்கு வேலை வாய்ப்பை உருவாக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. சென்னை இல் உள்ள எலியம்பேடு கிராமத்தில் மஹிந்திரா - பேஸ் மிமி தொடக்கத்துடன் இது வருகிறது, இது இந்த முதலீட்டிற்கான தளமாக இருக்கும்.

இந்த நிறுவனம் வெற்றிகரமான முதல் கட்டத்துடன் மாவட்டத்தில் ஏற்கனவே தனது தடத்தை நிறுவியுள்ளது. 307 ஏக்கர் நிலத்தில் பரவியுள்ள ஆரிஜின்ஸ் பை மஹிந்திரா புகழ்பெற்ற ஜப்பானிய மற்றும் தைவான் நிறுவனங்களுக்கு ஒரு விருப்பமான தொழில்துறை மையமாக மாறியுள்ளது. யன்மார் இன் ஜின் மேனுஃபேக்சரிங் இந்தியா பிரைவேட் லிமிடெட், நிசி எலக்ட்ரிக் இந்தியா பிரைவேட். லிமிடெட், யூ எஸ் யு ஐ சுசிரா இன்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட், மிட்சுபிஷி எலக்ட்ரிக், ஓம்ரான் ஹெல்த்கேர், ட்ராக் டிசைன்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், ஐ என் டி ஜெ ஆர் ப்ரிசிஷன் டெக்னாலஜி பிரைவேட் லிமிடெட், ஆட்டோகிரிப் மெஷினரி இந்தியா பிரைவேட் லிமிடெட், மசானோ செய்கி பிரைவேட் லிமிடெட் மற்றும் ஆஷிர்வாத் பைப்ஸ் பிரைவேட். லிமிடெட் போன்ற குறிப்பிடத்தக்க நிறுவனங்கள் இதைத் தங்களுக்கு விருப்பமான இடமாகத் தேர்ந்தெடுத்துள்ளன. சென்னையில் ஆரிஜின் பை மஹிந்திரா, நிலையான மற்றும் சுற்றுச்சூழல் உணர்வுள்ள தொழில்துறை வளர்ச்சிக்கான ஒரு அர்ப்பணிப்பை முக்கியப்படுத்திக்காட்டுகின்ற, தமிழ்நாட்டில் மதிப்புமிக்க ஐ ஜி பி ஆர் கிரீன் சிட்டீஸ் 'பிளாட்டினம்' மதிப்பீட்டைப் பெற்ற முதல் தொழில்துறைக் குழுவாகும்.

மஹிந்திரா லைஃப்ஸ்பேஸ் டெவலப்பர்ஸ் லிமிடெட் இன் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி அமித் குமார் சின்ஹா கூறுகையில், "மஹிந்திரா லைஃப்ஸ்பேஸ்ஸ் இன் பிரிவான இன்டெகிரெட்டட் சிட்டிஸ் அண்ட் இண்டஸ்ட்ரியல் க்ளஸ்டர்ஸ் (ஐ சி & ஐ சி) ஆன ஆரிஜின் பை மஹிந்திரா பேஸ் - மிமி மூலம் வணிகத் திறனைத் தொடர்ந்து துரிதப்படுத்துவதற்கும் மற்றும் பிளக் அண்ட் ப்ளே உள்கட்டமைப்பு மூலம் வணிகமயமாக்கலை மேம்படுத்துவதற்கும் நாங்கள் எங்களின் இருப்பை விரிவுபடுத்துகிறோம். தமிழ்நாட்டின் புகழ்பெற்ற வணிகச் சூழல், இங்கே எங்கள் செயல்பாடுகளை விரிவுபடுத்துவதில் எங்களின் நம்பிக்கையை மேலும் வலுப்படுத்துகிறது. மஹிந்திரா லைஃப்ஸ்பேஸ் தமிழ்நாட்டின் பொருளாதாரச் சூழலில் ஒரு ஒருங்கிணைந்த பகுதியாக இருந்து வருகிறது, மேலும் மாநிலத்தில் வணிக வளர்ச்சியை மேலும் மேம்படுத்துவதற்கான அரசாங்கத்தின் உறுதிப்பாட்டை நாங்கள் பாராட்டுகிறோம். கூடுதலாக, நிலையான வளர்ச்சி மற்றும் உலகத் தரம் வாய்ந்த உள்கட்டமைப்புக்கான எங்கள் அர்ப்பணிப்பு, இந்திய அரசின் 'மேக் இன் இந்தியா' திட்டம் மற்றும் இந்தியாவின் இலட்சிய வளர்ச்சித் திட்டத்துடன் தடையின்றி ஒத்துப்போகிறது. துடிப்பான மற்றும் ஒருங்கிணைந்த தொழில்துறை சுற்றுச்சூழல் அமைப்புகளை உருவாக்குவதன் மூலம், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு செழித்தோங்கவும், புதுமைப்படுத்தவும் மற்றும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கவும் வணிகங்களுக்கு சிறந்த தளத்தை நாங்கள் வழங்குகிறோம்." என்று கூறினார். மஹிந்திரா லைஃப்ஸ்பேஸ் டெவலப்பர்ஸ் லிமிடெட் இன் இண்டஸ்ட்ரியல் தலைமை வணிக அதிகாரி ராஜாராம் பய் கூறுகையில், "ஆரிஜின்ஸ் பை மஹிந்திரா பேஸ் மிமி இன் இந்த அறிமுகமானது, நிறுவனங்கள் தங்கள் உற்பத்தி அலகுகளை நிறுவ விரும்பும் ஒரு இலக்காக, ஆரிஜின்ஸ் பை மஹிந்திரா இன் வெற்றி மற்றும் ஈர்ப்புத்தன்மைக்கு ஒரு சான்றாக இருக்கிறது. இது எங்கள் வணிக விரிவாக்கம் மற்றும் வளர்ச்சி பயணத்தில் ஒரு முக்கியமான முன்னேற்றத்தைக் குறிக்கிறது. நிலைத்தன்மையின் மீதான எங்கள் கவனம் சுற்றுச்சூழல் பொறுப்பான நடைமுறைகள் மற்றும் வளர்ச்சிக்கான எங்கள் உறுதிப்பாட்டை பகிர்ந்துகொள்ளும் தொழில்களையும் ஈர்க்கும் என்று நாங்கள் நம்புகிறோம். தமிழகம் மற்றும் ஒட்டுமொத்த தேசத்தின் பொருளாதார செழுமைக்கு பங்களிக்கும் ஆற்றல்மிக்க சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்கி, இந்த விரிவாக்க கட்டத்திற்காக ஒரு பல்வேறு தொழில்களில் நாங்கள் கவனம் செலுத்தி வருகிறோம்." என்று கூறினார்.

ஆரிஜின்ஸ் பை மஹிந்திரா சென்னை, தங்க நாற்கர சாலையின் ஒரு பகுதியான என் எச்16 இல் அமைந்துள்ளது மேலும் சென்னை - பெங்களூர் இண்டஸ்ட்ரியல் காரிடார் (சி பிஐ சி) மற்றும் சென்னை - விசாகப்பட்டினம் இண்டஸ்ட்ரியல் காரிடார் (சி விஐ சி) ஆகியவற்றிற்கு மிகவும் அருகாமையில் பொன்னேரிக்கு அருகில் உள்ளது. சென்னை இல் ஆரிஜின்ஸ் பை மஹிந்திரா விதிவிலக்கான அணுகலைக் கொண்டு பயனடைகிறது. சென்னை, எண்ணூர் மற்றும் காட்டுப்பள்ளி ஆகிய மூன்று முக்கிய துறைமுகங்களுக்கான அணுகல் மற்றும் சென்னை நகரத்தின் சிபிடி க்கு வசதியான இணைப்புடன், இந்த தொழில்துறைப் பூங்கா வணிக வெற்றிக்கு ஏற்ற வகையில் அமைந்துள்ளது.

# சென்னையில் கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டி நடைபெறும் மைதானங்கள்: தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா ஆய்வு



சென்னை, 11 ஜனவரி 2024: சென்னையில் கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டி நடைபெறும் மைதானங்களை தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா ஆய்வு செய்தார்.

6 வது கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் 2023 தமிழ்நாடு வரும் ஜனவரி 19 முதல் 31ம் தேதி வரை தமிழகத்தில் சென்னை, கோயம்பத்தூர், திருச்சி, மதுரை ஆகிய 4 நகரங்களில் நடைபெற உள்ளது. இந்த விளையாட்டில் இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களில் இருந்து, 6000க்கும் மேற்பட்ட வீரர், வீராங்கனைகள் கலந்து கொள்ளவுள்ளனர். இந்த போட்டியை சிறப்பாக நடத்துவதற்கான முன்னேற்பாடு பணிகளை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மேற்கொண்டு வருகிறது.

இதன் ஒரு கட்டமாக சென்னையில் போட்டி நடைபெற உள்ள விளையாட்டு மைதானங்களும் மறுசீரமைக்கப்பட்டு வருகிறது. தொடக்க விழா நடைபெறும் சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்க மைதானத்தில் செயற்கை ஓடுதள பாதை அமைக்கப்பட்டு வருகின்றன. கடந்த சில தினங்களுக்கு முன்னர் மைதான சீரமைப்பு பணிகளை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பார்வையிட்டு ஆலோசனை வழங்கினார்.

இதன் தொடர்ச்சியாக தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் இடங்களான ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம், மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கம், எழும்பூர் ராஜரத்தினம் விளையாட்டரங்கம், நுங்கம்பாக்கம் டென்னிஸ் விளையாட்டரங்கம், வேளச்சேரி நீச்சல் குளவளாகம் மற்றும் வேளச்சேரி, குரு நானக் கல்லூரி ஆகிய இடங்களில் முன்னேற்பாடு பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

குரு நானக் கல்லூரி மைதானம்

குரு நானக் கல்லூரியில் உள்ள துப்பாக்கி சுடும் மையத்தில் அமைக்கப்பட்டுள்ள 50 மீட்டர், 25 மீட்டர் மற்றும் 10 மீட்டர் பாதைகளை தலைமைச் செயலாளர் பார்வையிட்டார். அப்போது அங்கு செய்யப்பட்டுள்ள வசதிகள் குறித்து கல்லூரி நிர்வாகத்திடம் கேட்டறிந்தார். வீரர் வீராங்கனைகளுக்கு தேவையான அடிப்படை வசதிகள் அனைத்தையும் செய்து கொடுக்குமாறும் அறிவுறுத்தினார்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கீழ் செயல்படும் வேளச்சேரி நீச்சல் குளவளாகத்தை ஆய்வு செய்த போது அங்கு வீரர், வீராங்கனைகள் உடை மாற்றும் அறையை பார்வையிட்டார். இதன் பின்னர் இதே வளாகத்தில் உள்ள ஜிம்னாஸ்டிக் மையத்தை ஆய்வு செய்த அவர், போட்டி நடைபெறும் பகுதியில் காற்றோட்ட வசதி இருக்குமாறும் அறிவுறுத்தினார். இங்குள்ள உள்ளரங்க பாட்மிண்டன் மைதானத்தின் வசதிகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கீழ் செயல்படும் நுங்கம்பாக்கம் டென்னிஸ் மைதானத்துக்கு சென்ற தலைமைச் செயலாளர், பிரதான ஆடுகளம் மற்றும் வெளிப்புறத்தில் உள்ள ஆடுகளங்களையும் ஆய்வு செய்தார். போட்டியை காண ஏராளமானோர் வருகைதரக்கூடும் என்பதால் சுற்றுப்புறத்தை எப்போதும் தூய்மையாக வைத்திருக்க வேண்டும் என அதிகாரிகளை வலியுறுத்தினார்.

ராஜரத்தினம் மைதானத்தில் செய்யப்பட்ட வசதிகள்

இதையடுத்து யோகா, மல்யுத்த போட்டிகள் நடைபெற உள்ள இராஜரத்தினம் மைதானத்துக்கு சென்ற தலைமைச் செயலாளர், அங்கு வீரர், வீராங்கனைகளுக்கு செய்து கொடுக்கப்பட வேண்டிய வசதிகள் கேட்டறிந்தார். மேலும், பார்வையாளர்களுக்கு தேவையான குடிநீர், கழிப்பறை வசதிகள் செய்து தருமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். தொடர்ந்து எழும்பூரில் உள்ள மேயர் ராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கில் ஆய்வு பணி மேற்கொண்டார். அங்குள்ள வீரர்கள் ஓய்வு அறையையும், தலைமைச் செயலாளர் அவர்கள் பார்வையிட்டார்.

அப்போது கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டில் கலந்து கொள்ளவுள்ள தமிழ்நாடு ஹாக்கி அணிகளின் வீரர், வீராங்கனைகளை தலைமைச் செயலாளர் சந்தித்து குழு புகைப்படம் எடுத்துக்கொண்டதோடு, இரு அணி வீரர்களுக்கும் தன்னம்பிக்கையும் தைரியத்தையும் கூறினார். நீங்கள் விளையாடும் போட்டியை நேரில் காண வருவதாகவும் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அதுல்ய மிஸ்ரா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் டாக்டர். ஜெ. இராதாகிருஷ்ணன், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, பெருநகர சென்னை காவல் ஆணையர் சந்தீப் ராய் ரத்தோர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.

# பழைய பொருட்கள் எரிப்பதை தவிர்த்து, அதனை தூய்மைப் பணியாளர்களிடம் வழங்குங்கள்: மேயர் பிரியா




சென்னை, 11 ஜனவரி 2024: சென்னை மாநகராட்சியின் சார்பில் போகிப் பண்டிகையை முன்னிட்டு, புகையில்லா போகி குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் தியாகராய நகர் சாரதா வித்யாலயா மாதிரி பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவியர்கள் பங்கேற்ற புகையில்லா போகி விழிப்புணர்வுப் பேரணியினை மேயர் ஆர்.பிரியா நேற்று கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மேயர் பேசும்போது தெரிவித்ததாவது:ரூ

பள்ளிப்பருவம் என்பதே வாழ்க்கையின் மிகவும் முக்கியமான பருவம். இதில் வாழ்க்கையை மகிழ்ச்சியோடு கொண்டாடுவதோடு மட்டுமில்லாமல், படிப்பில் அதிக கவனம் செலுத்தி சிறப்பாக படிக்க வேண்டும். பெண்களுக்கு படிப்பு மிகவும் முக்கியமானதாகும். மாணவர்கள் தங்களுக்கென்று ஒரு இலக்கை வைத்து அதனைத் தொடர்ந்து செயல்படுத்தும் வகையில் முன்னேறிட வேண்டும்.

முதலமைச்சர் பெண்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். நீங்கள் அனைவரும் தொடர்ந்து படிப்பதற்கு அரசு அனைத்து விதத்திலும் உறுதுணையாக இருக்கும்.

போகிப் பண்டிகை என்பது நமது வீட்டில் உள்ள பழைய பொருட்களை எரிக்கவேண்டும் என்பதையும் தாண்டி, நமது மனதில் உள்ள வன்மங்கள், கோபங்கள் மற்றும் பகை போன்ற தீய எண்ணங்களை அகற்றும் வகையில் இருக்கவேண்டும். சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படுத்தும் வகையில் ரப்பர், டயர், பிளாஸ்டிக் பொருட்கள் உள்ளிட்ட பழைய பொருட்களை எரிப்பதனைத் தவிர்த்து, தங்களது இல்லத்திற்கு குப்பை சேகரிக்க வரும் தூய்மைப் பணியாளர்களிடம் வழங்கிட வேண்டும். பெற்றோர்கள் மற்றும் அருகில் உள்ளவர்களுக்கு இதுகுறித்து எடுத்துக் கூறி விழிப்புணர்வினை ஏற்படுத்திட வேண்டும்.

மாணவர்களாகிய நீங்களும், உங்கள் குடும்பத்தினரும் இதனைக் கடைப்பிடிக்கும் பொழுது உங்களைப் பார்க்கும் அனைவரும் இதனைப் பின்பற்றுவார்கள். மாற்றம் என்ற ஒன்று நம்மிடம் இருந்து தான் தொடங்க வேண்டும். அனைவருக்கும் சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்துவது நமது கடமையாகும்.

இவ்வாறு மேயர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி, ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) சங்கர்லால் குமாவத், நிலைக்குழுத் தலைவர் கோ.சாந்தகுமாரி, மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜெ.பிரவீன் குமார், நியமனக் குழு உறுப்பினர் ராஜா அன்பழகன், மாமன்ற உறுப்பினர் ஏழுமலை, சுகாதார கல்வி அலுவலர் டி.ஜி.சீனிவாசன் மற்றும் எக்ஸ்நோரா நிர்வாகி ஸ்ரீதரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



**மத்திய அரசால் வழங்கப்படும் உயரிய விருதான அர்ஜூனா விருது பெற்ற தமிழக செஸ் வீராங்கனை ஆர்.வைஷாலி, விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலினை நேற்று சந்தித்து வாழ்த்து பெற்றார். இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அதுல்ய மிஸ்ரா உடனிருந்தனர்.**

# ஷிண்டே அணி தான் உண்மையான சிவசேனா: மராட்டிய சபாநாயகர் அறிவிப்பு



சென்னை, 11 ஜனவரி 2024: சிவசேனா 2 அணிகளை சேர்ந்த எந்த எம்.எல்.ஏ.க்களும் தகுதி நீக்கம் செய்யப்படவில்லை என்றும், ஷிண்டே அணியினர் தான் உண்மையான சிவசேனா என்றும் மராட்டிய சபாநாயகர் அறிவித்தார்.

மராட்டியத்தில் சிவசேனா, தேசியவாத காங்கிரஸ், காங்கிரஸ் கூட்டணி ஆட்சி நடந்து வந்த நிலையில், கடந்த 2022-ம் ஆண்டு ஜூன் மாதம் சிவசேனாவில் பிளவு ஏற்பட்டது. மொத்தம் 55 எம்.எல்.ஏ.க்களை கொண்ட அந்த கட்சியை ஏக்நாத் ஷிண்டே உடைத்தார். 40 எம்.எல்.ஏ.க்களின் ஆதரவை அவர் தனதாக்கி கொண்டதால், உத்தவ் தாக்கரே அரசு கவிழ்ந்தது.

இந்த அரசியல் நெருக்கடி நடந்த சூழலில் ஏக்நாத் ஷிண்டே உள்பட 16 எதிரணி எம்.எல்.ஏ.க்களை தகுதி நீக்கம் செய்யக்கோரி உத்தவ் தாக்கரே தரப்பினர் அப்போதைய சபாநாயகரிடம் தகுதி நீக்க மனுவை அளித்தனர். இதேபோல உத்தவ் தாக்கரே தரப்பை சேர்ந்த ஆதித்ய தாக்கரேவை தவிர்த்து 14 எம்.எல்.ஏ.க்கள் மீது ஏக்நாத் ஷிண்டே அணியினர் தகுதி நீக்க மனு அளித்தனர்.

இந்த பரபரப்புக்கு மத்தியில் பாரதீய ஜனதாவுடன் கூட்டணி வைத்து ஏக்நாத் ஷிண்டே ஆட்சியை கைப்பற்றினார். சிவசேனா கட்சி பெயர் மற்றும் கட்சியின் வில்-அம்பு சின்னம் ஏக்நாத் ஷிண்டே தரப்புக்கு சொந்தம் என்று தேர்தல் ஆணையம் உத்தரவிட்டது. இதனால் உத்தவ் பாலாசாகேப் தாக்கரே சிவசேனா என்ற பெயரில் உத்தவ் தாக்கரே அணி செயல்பட்டு வருகிறது.

இதற்கு மத்தியில் நிலுவையில் உள்ள சிவசேனாவின் இருதரப்பு எம்.எல்.ஏ.க்களின் தகுதி நீக்க மனுக்கள் மீது தற்போதைய சபாநாயகர் முடிவு எடுக்குமாறு கடந்த ஆண்டு மே மாதம் 11-ந் தேதி சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டது. ஆனால் சபாநாயகர் காலம் தாழ்த்தி வருவதாக உத்தவ் தாக்கரே தரப்பு அணுகியபோது, தகுதிநீக்க மனுக்கள் மீது ஜனவரி 10-ந் தேதிக்குள் (நேற்று) முடிவை அறிவிக்குமாறு சுப்ரீம் கோர்ட் சபாநாயகருக்கு கெடு விதித்தது.

இதையடுத்து சபாநாயகர் ராகுல் நர்வேகர் சிவசேனாவின் இருதரப்பை சேர்ந்த அனைத்து எம்.எல்.ஏ.க்களுக்கும் நோட்டீஸ் அனுப்பி விசாரித்தார். சுப்ரீம் கோர்ட் உத்தரவின்படி நேற்று அவர் தனது முடிவை அறிவித்தார்.

மனுக்களை நிராகரித்தார்

அப்போது, முதலமைச்சர் ஏக்நாத் ஷிண்டே உள்பட அவரது தரப்பு 16 எம்.எல்.ஏ.க்கள் மீதான தகுதி நீக்க மனுக்களை சபாநாயகர் அதிரடியாக நிராகரித்தார். இதேபோல உத்தவ் தாக்கரே தரப்பை சேர்ந்த 14 எம்.எல்.ஏ.க்களின் தகுதி நீக்க மனுக்களையும் நிராகரித்தார்.

மேலும் ஏக்நாத் ஷிண்டே தரப்பினர் தான் உண்மையான சிவசேனா என்றும் கூறினார். அவர்கள் ஏன் உண்மையான சிவசேனா என்பதற்கான 10 காரணங்களையும் அவர் தெரிவித்தார்.

சபாநாயகர் உத்தரவு மூலம் ஏக்நாத் ஷிண்டேவின் எம்.எல்.ஏ. பதவி நீடிப்பதால், அவரது அரசு தப்பியது.

# சி ஈ எஸ் 2024 இல் சாம்சங்கின் 'அனைவருக்கும் ஏ ஐ' தொலைநோக்கு வெளியிடப்பட்டுள்ளது

சென்னை, 11 ஜனவரி 2024: செயற்கை நுண்ணறிவு (ஏ ஐ) தொழில்நுட்பம் எவ்வாறு மக்கள் தங்கள் சாதனங்களை முன்பை விட மிகவும் உள்ளுணர்வாகவும் வசதியாகவும் அனுபவிக்க உதவும் என்பதை சாம்சங் எலெக்ட்ரானிக்ஸ் இன்று பகிர்ந்து கொண்டது. செய்தியாளர் சந்திப்பில் இந்த யோசனைகளை முன்வைத்த சாம்சங், இந்த பார்வையின் பின்னணியில் உள்ள தொழில்நுட்பத்தையும் புதிய தயாரிப்புகள் மற்றும் சேவைகள் வாழ்க்கையை எளிதாக்க ஏ ஐ திறன்களை எவ்வாறு பயன்படுத்துகின்றன என்பதையும் கோடிட்டுக் காட்ட முக்கிய கூட்டாளர்களுடன் இணைந்தது.

சாம்சங்கின் டிவைஸ் எக்ஸ்பீரியன்ஸ் (டி எக்ஸ்) பிரிவின் துணைத் தலைவர், சி ஈ ஓ மற்றும் தலைவரான ஜாங்-ஹீ (ஜெ எச்) ஹான், செய்தியாளர் சந்திப்பைத் தொடங்கி, எப்பொழுதும் ஊடுருவாமல், "பின்னணியில் இருக்கும் போது மக்களின் அன்றாட வாழ்க்கையை மேம்படுத்த ஏ ஐ இணைக்கப்பட்ட தொழில்நுட்பங்களை எவ்வாறு செயல்படுத்தும் என்பதை விவரித்தார்." அவரும் மற்றவர்களும் கோடிட்டுக் காட்டிய உத்தியானது எளிமையான மற்றும் பயனுள்ள இணைக்கப்பட்ட அனுபவங்களை மேம்படுத்துவதில் ஏ ஐ இன் பங்கை மையமாகக் கொண்டது. செய்தியாளர் சந்திப்பு முழுவதும், சாம்சங் இந்த நோக்கங்களை அடைய உதவும் பல தயாரிப்புகள் மற்றும் சேவைகளை வழங்கியது.

"செயற்கை நுண்ணறிவின் தோற்றத்துடன், புத்திசாலித்தனமான, சிறந்த அனுபவங்கள் நாம் எப்படி வாழ்கிறோம் என்பதை மறுவரையறை செய்யும்" என்று ஹான் கூறினார். "சாம்சங்கின் சக்திவாய்ந்த சாதனங்களின் பரந்த போர்ட்ஃபோலியோ, சிறந்த ஒத்துழைப்பைப் பின்தொடர்வதுடன், அனைவருக்கும் ஏ ஐ மற்றும் ஹைப்பர்-இணைப்பைக் கொண்டுவர உதவும்."

# மகாராஷ்டிரா சபாநாயகருக்கு எதிராக பிரமாணப் பத்திரம்: உச்ச நீதிமன்றத்தில் உத்தவ் தாக்கரே சார்பில் தாக்கல்



சென்னை, 11 ஜனவரி 2024: மகாராஷ்டிரா சபாநாயகருக்கு எதிராக சிவ சேனா தலைவர் உத்தவ் தாக்கரே, உச்ச நீதிமன்றத்தில் பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்துள்ளார்.

இது தொடர்பாக மும்பையில் உள்ள தனது மாதோஸ்ரீ இல்லத்தில் செய்தியாளர்களிடம் பேசிய உத்தவ் தாக்கரே கூறியதாவது:-

"முதல்வர் ஏக்நாத் ஷிண்டே மற்றும் அவரோடு சேர்ந்து தனி அணியாக செயல்பட்ட எம்எல்ஏக்களை தகுதி நீக்கம் செய்யக்கோரும் மனுவை விசாரித்த உச்ச நீதிமன்றம், இது தொடர்பாக மகாராஷ்டிர சபாநாயகர் ராகுல் நர்வேகர் டிசம்பர் 31, 2023 க்குள் முடிவெடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டது. அதன்பின் மேலும் 10 நாட்கள் நீட்டிக்கப்பட்டது. ஆனால், இதுவரை சபாநாயகர் தனது உத்தரவை அறிவிக்கவில்லை. இந்நிலையில், இந்த விவகாரத்தில் முடிவெடுக்கும் முன்பாக அவர், முதல்வர் ஏக்நாத் ஷிண்டேவை சந்தித்து பேசி உள்ளார். நீதிபதி குற்றவாளியை சந்தித்துப் பேசுவது போன்றது இது.

சபாநாயகரின் செயல் அவர் மீது பெருத்த சந்தேகத்தை ஏற்படுத்தி உள்ளது. அவர் நியாயமாக தீர்ப்பளிப்பாரா என்ற சந்தேகம் நியாயமானதே. அதோடு, தனது தீர்ப்பை மேலும் தள்ளிப் போடுவதற்கான திட்டமாகவும் இருக்கலாம். எனவே, இது தொடர்பாக உச்சநீதிமன்றத்தில் நாங்கள் பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்துள்ளோம். சபாநாயகர் சார்பற்ற முறையில் நடந்து கொள்ள வேண்டும். ஆனால், அவரது செயல்பாடு சார்பற்றவராக அவர் இருப்பாரா, சார்பற்ற முறையில் தனது கடமையை ஆற்றுவாரா என்ற பெருத்த சந்தேகத்தை கிளப்பி இருக்கிறது" என தெரிவித்துள்ளார்.

உத்தவ் தாக்கரேவின் இந்த குற்றச்சாட்டுக்கு பதில் அளித்துள்ள சபாநாயகர் ராகுல் நர்வேகர், "ஏக்நாத் ஷிண்டே முதல்வர் மற்றும் சட்டப்பேரவை உறுப்பினர். சட்டப்பேரவை விவகாரம் தொடர்பாக நாங்கள் சந்தித்துக்கொள்வது முக்கியம். எனது தொகுதியில் உள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முதல்வரிடம் பேசுவதும் அவசியம். இதற்கு உள்நோக்கம் கற்பிப்பிப்பது தவறு. இது தொடர்பாக யாருக்கும் விளக்கம் அளிக்க வேண்டிய தேவை இருப்பதாக நான் நினைக்கவில்லை என்று கூறியுள்ளார்.

# வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து பல்வேறு அமைப்பினர் போராட்டம்: போலீஸ் குவிப்பு சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தில் கவர்னர் ஆர்.என்.ரவி ஆய்வு கைதான துணைவேந்தர் வரவேற்றதால் சர்ச்சை



சென்னை, 11 ஜனவரி 2024: சேலம் பெரியார் பல்கலைக்கழகத்துக்கு வருகை தந்த தமிழக கவர்னர் ஆர்.என்.ரவியை, முறைகேடு புகாரில் கைதாகி ஜாமீனில் வெளியே வந்த துணைவேந்தர் ஜெகநாதன் வரவேற்றது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

கவர்னர் வருகையை கண்டித்து பல்வேறு கட்சியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட முயற்சித்ததால் அங்கு பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. இன்று காலை அலுவலக வளாகத்தில் மாநகரப் போலீசார் மீண்டும் சோதனை நடத்தி வருவதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

அரசின் அனுமதியின்றி தனியார் நிறுவனம் தொடங்கி மோசடியில் ஈடுபட்டதாக பெரியார் பல்கலைக்கழக துணைவேந்தர் ஜெகநாதன் மீது அளிக்கப்பட்ட புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு அவர் கைது செய்யப்பட்டு ஜாமீனில் வெளிவந்துள்ளார். மேலும் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் தங்கவேல், பேராசிரியர்கள் சதீஷ் ராம், கணேஷ் ஆகியோர் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டு போலீசார் அவர்களை தேடி வருகின்றனர்.

பெரியார் பல்கலைக்கழக வளாகத்தில் 7 இடங்களில் கடந்த டிசம்பர் 28ம் தேதி 21 மணி நேரத்துக்கு மேலாக போலீசார் சோதனை நடத்தினர்.

இதற்கிடையே பேராசிரியர்கள், அலுவலர்கள் கூட்டத்தில் பங்கேற்பதற்காக பெரியார் பல்கலைக்கழகத்துக்கு இன்று மதியம் தமிழக கவர்னர் ஆர்.என்.ரவி வருகை தந்தார். அப்போது முறைகேடு புகாரில் கைதாகி ஜாமீனில் வெளியே வந்த துணைவேந்தர் ஜெகநாதன் கவர்னரை வரவேற்றார். அங்கு போலீஸ் அணிவகுப்பு மரியாதையை ஏற்று கொண்டு கவர்னர் ரவி ஆய்வு கூட்டத்தில் பங்கேற்க சென்றார். இது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

பல்கலைக்கழக துணை வேந்தரை பணியிடை நீக்கம் செய்ய மறுத்த கவர்னர் இன்று அவரை சந்தித்துள்ளார். கவர்னருக்கு எதிராக போஸ்டர்கள் ஒட்டப்பட்டுள்ளன.

எதிர்ப்பு தெரிவித்து போராட்டம்

இதனிடையே, கவர்னர் ஆர்.என். ரவி வருகை தருவதற்கு எதிர்ப்பு தெரிவித்து மாணவர் அமைப்பினர் மற்றும் பல்வேறு கட்சியினர் கருப்புக்கொடி காட்டி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட முயன்றனர். தி.மு.க., மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிகள், திராவிடர் கழகம் உள்ளிட்ட பல்வேறு கட்சியைச் சேர்ந்த நிர்வாகிகள் கட்சி கொடிகளுடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட பல்கலைக்கழகம் முன் திரண்டனர். இதனால் பெரியார் பல்கலைக்கழகம் முன்பு பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டது. போராட்டத்தில் ஈடுபட முயன்றவர்களை போலீசார் கைது செய்தனர்.

சேலம் மாநகர கமிஷனர் விஜயகுமாரி தலைமையில் பல்கலைக்கழகம் முழுவதும் 3 அடுக்கு போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பெரியார் பல்கலைக்கழக வளாகத்தில் முறைகேடு தொடர்பாக, 5 இடங்களில் சேலம் மாநகர போலீசார் இன்று காலை மீண்டும் அதிரடியாக சோதனையில் ஈடுபட்டுள்ளதால் பரபரப்பு நிலவுகிறது.

# பொங்கல் பண்டிகை: நெல்லை, தூத்துக்குடிக்கு சிறப்பு ரெயில்கள்




சென்னை, 11 ஜனவரி 2024: பொங்கல் பண்டிகையை சொந்த ஊர்களில் கொண்டாட செல்லும் மக்களுக்காக சிறப்பு ரெயில்கள் ஏற்கனவே விடப்பட்டன. தென்மாவட்ட பகுதிகளுக்கு செல்லக்கூடிய வழக்கமான ரெயில்கள் அனைத்தும் நிரம்பிவிட்டன. சிறப்பு ரெயில்களிலும் காத்திருப்போர் பட்டியல் கணிசமாக உயர்ந்தது. இதனால் கூடுதலாக சிறப்பு பஸ்களை இயக்க தெற்கு ரெயில்வே முடிவு செய்தது. கூட்ட நெரிசலை குறைக்க மேலும் 2 சிறப்பு ரெயில்கள் இன்று அறிவிக்கப்பட்டன. தாம்பரம்-தூத்துக்குடிக்கு முன்பதிவு இல்லாத சிறப்பு ரெயிலும், தாம்பரம்-திருநெல்வேலிக்கு முன்பதிவு சிறப்பு ரெயிலும் விடப்பட்டுள்ளது.

அதன் விவரம் வருமாறு:-

தாம்பரத்தில் இருந்து தூத்துக்குடிக்கு 14-ந் தேதி (ஞாயிற்றுக்கிழமை) பகல் நேரத்தில் முன்பதிவு செய்யப்படாத சிறப்பு ரெயில் இயக்கப்படுகிறது. காலை 7.30 மணிக்கு தாம்பரத்தில் புறப்படும் இந்த ரெயில் இரவு 10.45 மணிக்கு தூத்துக்குடி செல்கிறது. இதேபோல 16-ந்தேதி (செவ்வாய்க்கிழமை)யும் மற்றொரு சிறப்பு ரெயில் தூத்துக்குடிக்கு விடப்பட்டுள்ளது.தூத்துக்குடியில் இருந்து தாம்பரத்திற்கு 15 மற்றும் 17-ந்தேதிகளில் சிறப்பு ரெயில் இயக்கப்படுகிறது. இந்த ரெயில் தூத்துக்குடியில் காலை 6 மணிக்கு புறப்பட்டு இரவு 8.30 மணிக்கு தாம்பரம் வந்து சேரும்.சிறப்பு ரெயிலில் 2-ம் வகுப்பு பொதுப்பெட்டிகள் 2, 2-ம் வகுப்பு பெட்டிகள் 2 என மொத்தம் 22 பெட்டிகள் இடம்பெற்று உள்ளன.

இதேபோல தாம்பரத்தில் இருந்து திருநெல்வேலிக்கு நாளை (11-ந்தேதி) 13, 16-ந்தேதிகளில் சிறப்பு ரெயில் இயக்கப்படுகிறது. இரவு 9.50 மணிக்கு தாம்பரத்தில் புறப்படும் இந்த முன்பதிவு சிறப்பு ரெயில் மறுநாள் காலை 11.15 மணிக்கு திருநெல்வேலி சென்றடைகிறது. மறுமார்க்கத்தில் திருநெல்வேலியில் இருந்து தாம்பரத்திற்கு 12, 14, 17 ஆகிய தேதிகளில் சிறப்பு ரெயில் இயக்கப்படுகிறது. திருநெல்வேலியில் பகல் 2.15 மணிக்கு புறப்படும் இந்த ரெயில் மறுநாள் அதிகாலை 3.15 மணிக்கு தாம்பரம் வந்து சேரும். இந்த ரெயிலில் 3-ம் வகுப்பு ஏ.சி. படுக்கை வசதி-3 பெட்டிகள், ஏ.சி. 3 அடுக்கு படுக்கை எக்னாமிக் பெட்டிகள்-9, 2-ம் வகுப்பு படுக்கை வசதி பெட்டி-2, 2-ம் வகுப்பு பொது பெட்டி-2 உள்ளன.

இந்த சிறப்பு ரெயில் தாம்பரத்தில் இருந்து விழுப்புரம், திருச்சி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், சிவகாசி, ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம், சங்கரன்கோவில், கடையநல்லூர், தென்காசி, பாவூர்சத்திரம், கீழகடையம், அம்பாசமுத்திரம், கல்லிடைகுறிச்சி, சேரன்மாதேவி வழியாக திருநெல்வேலி சென்றடைகிறது.அதே போல நெல்லையில் இருந்தும் இதே வழித்தடத்தில் இயக்கப்படுகிறது. இதற்கான முன்பதிவு விரைவில் தொடங்கும் என்று தலைமை மக்கள் தொடர்பு அதிகாரி குகநேசன் தெரிவித்துள்ளார்.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# டாடா பாசஞ்சர் எலக்ட்ரிக் மொபிலிட்டி அதன் முதல் தூய ஈவி கட்டமைப்பு - 'ஆக்டி.ஈவி'ஐ அறிமுகப்படுத்துகிறது

சென்னை, 11 ஜனவரி 2024: இந்தியாவில் ஈவி பரிணாம வளர்ச்சியின் முன்னோடியான டாடா பேசஞ்சர் எலக்ட்ரிக் மொபிலிடி (டி பி ஈ எம்) இன்று அதன் முதல் மேம்பட்ட தூய ஈவி கட்டமைப்பு - ஆக்டி.ஈவிஐ (ஆக்டிவ் என்று உச்சரிக்கப்படுகிறது) அறிமுகப்படுத்தியது. ஆக்டி.ஈவி என்பது (அட்வான்ஸ்ட் கனெக்டெட் டெக் இண்டலிஜெண்ட் எலக்ட்ரிக் வெகிகிள்) என்பதைக் குறிக்கிறது மற்றும் டி பி ஈ எம் போர்ட்ஃபோலியோவில் இருந்து எதிர்கால தயாரிப்புகளை இது ஆதரிக்கவுள்ளது. பன்ச்.ஈவி இந்த பியூர் எலக்ட்ரிக் ஆர்க்கிடெக்சர் அடிப்படையிலான முதல் தயாரிப்பாகும், இது பல உடல் பாணிகள் மற்றும் அளவுகள் கொண்ட பல்வேறு தயாரிப்புகளை உருவாக்கும். இன்று முதல், வாடிக்கையாளர்கள் ஈவி விற்பனைக்கு அங்கீகரிக்கப்பட்ட அருகிலுள்ள டாடா மோட்டார்ஸ் ஷோரூம்கள் அல்லது டாடா.ஈவி ஸ்டோர்களுக்குச் சென்று வெறும் ரூ.21,000 செலுத்தி பன்ச்.ஈவி ஐ முன்பதிவு செய்யலாம். <https://bit.ly/punche-bookingsopen>என்ற இணையதளத்திலும் முன்பதிவு செய்யலாம்.

இந்த உத்வேகமளிக்கும் அறிமுகம் குறித்து கருத்து தெரிவித்த டாடா பாசஞ்சர் எலக்ட்ரிக் மொபிலிட்டி லிமிடெட் எச்வி திட்டங்கள் மற்றும் வாடிக்கையாளர் சேவையின் தலைவர், தலைமை தயாரிப்பு அதிகாரி திரு. ஆனந்த் குல்கர்னி அவர்கள், "இந்தியாவில் ஈவி பரிணாம வளர்ச்சியின் தலைவர்களாக, 2024 இல் நுழைவதில் பெருமிதம் கொள்கிறோம். ஆக்டி.ஈவி வடிவில் அற்புதமான வளர்ச்சி - இந்தியாவில் தயாரிக்கப்பட்ட மேம்பட்ட தூய ஈவி கட்டமைப்பாகும். இது நாட்டின் வேகமாக வளர்ந்து வரும் ஈவி சந்தையில் ஒரு டிரெண்ட்செட்டராக இருக்கும். இந்த கட்டமைப்பானது வகையினத்தின் முன்னணி செயல்திறன், அதிக இட வசதி, பேட்டரி திறன் மற்றும் ஒட்டுமொத்த ஓட்டுநர் அனுபவத்தை மேம்படுத்தும் வகையில் உன்னிப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆக்டி.ஈவி என்பது ஒரு உலகளாவிய தயாரான, எதிர்காலத்தை எதிர்கொள்ளும் தூய மின்சார கட்டமைப்பாகும், இது மென்பொருள் சார்ந்த அம்சங்களை செயல்படுத்த உதவுகிறது, எங்கள் வாகனங்கள் தொழில்நுட்ப ரீதியாக மேம்பட்டவை மட்டுமல்ல, எதிர்கால ஆதாரமாகவும் உள்ளன." "இதன் மூலம், இந்த மேம்பட்ட, பல அடுக்கு கட்டமைப்பில் தயாரிக்கப்பட்ட முதல் தயாரிப்பான - பன்ச்.ஈவி ஐ வெளியிடுவதை அறிவிப்பதில் நாங்கள் இரட்டிப்பு மகிழ்ச்சி அடைகிறோம். பன்ச்.ஈவி என்பது டி பி ஈ எம் இன் அடுத்த தலைமுறை ஈவிகளுக்கான எங்கள் அறிமுகமாகும். எங்களின் தற்போதைய ஈவி தயாரிப்புகளின் போர்ட்ஃபோலியோவைப் போலவே, எதிர்காலத்தில் ஆக்டி.ஈவி கட்டமைப்பில் தயாரிக்கப்படும் தயாரிப்புகள் தொடர்ந்து வளர்ந்து வரும் எங்கள் சமூகத்தில் மகிழ்ச்சியைத் தூண்டும் என்று நாங்கள் நம்புகிறோம்."

செயல்திறன், தொழில்நுட்பம், மாடுலாரிட்டி மற்றும் இடவசதி ஆகிய முக்கிய தூண்களை அடிப்படையாகக் கொண்ட இது, நான்கு அடுக்குகளைக் கொண்டுள்ளது:

அடுக்கு 1 - பவர்டிரெய்ன்

ஆக்டி.ஈவி ஆனது மேம்படுத்தப்பட்ட பேட்டரி பேக் வடிவமைப்பைக் கொண்டுள்ளது, செல்கள் மேம்பட்ட உலகளாவிய தரநிலைகளுக்கு சோதிக்கப்படுகின்றன - இது ஆற்றல் அடர்த்தியில் 10% முன்னேற்றத்திற்கு வழிவகுக்கிறது. இந்த பேட்டரி பேக் வடிவமைப்பு 300 கிமீ முதல் 600 கிமீ வரை பல வரம்பு விருப்பங்களையும் வழங்குகிறது. எடபிள்யுடி, ஆர்டபிள்யுடி மற்றும் எஃப்டபிள்யுடி க்கு இடையில், பொருத்தமான தயாரிப்புக்கான சரியான டிரைவ்டிரெய்ன் விருப்பத்தைத் தேர்ந்தெடுப்பதில் மட்டுப்படுத்துதலையும் கட்டமைப்பு அனுமதிக்கிறது. ஆக்டி.வீஈ ஆனது 7.2கிவா முதல் 11கிவா வரையிலான ஏசி ஃபாஸ்ட் சார்ஜிங் மற்றும் 150கிவா வரை டிசி ஃபாஸ்ட் சார்ஜிங்கிற்கு போர்டு சார்ஜரை ஆதரிக்கும் - இதன் மூலம் ~100 கிமீ வரம்பை வெறும் 10 நிமிடங்களில் சேர்க்கும்.

அடுக்கு 2 - சேஸ்

இந்த கட்டமைப்பின் இரண்டாவது அடுக்கு எதிர்கால ஜிஎன்சஏபி / பிஎன்சஏபி பாதுகாப்பு நெறிமுறைகளை சந்திக்கும் திறன் கொண்ட வலுவூட்டப்பட்ட உடல் அமைப்புடன் பல உடல் பாணிகளைக் கொண்டிருக்கலாம். ஆக்டி.ஈவி ஒரு டிரான்ஸ்மிஷன் டன்னல் இல்லாமல் ஒரு தட்டையான தளத்துடன் கேபின் இடத்தையும் சேமிப்பகத்தையும் அதிகரிக்கிறது, மேலும் கூடுதல் ஃப்ரங்க், எனவே கேபினில் இருப்பவர்களுக்கு அதிக இடத்தை அனுமதிக்கிறது. அதன் குறைந்த ஈர்ப்பு மையம் மேம்பட்ட ஓட்டுநர் இயக்கவியல் மற்றும் கையாளுதலுக்கு உதவுகிறது.

அடுக்கு 3 - மின் கட்டமைப்பு

ஆக்டி.ஈவி என்பது அதிக கம்ப்யூட்டிங் சக்திகள் மற்றும் எடிஎஎஸ் நிலை 2 திறன்களைக் கொண்ட எதிர்கால தயாராக அளவிடக்கூடிய கட்டமைப்பாகும். எடிஎஎஸ் எல்2+ திறன்களுக்கு கட்டமைப்பு தயாராக உள்ளது - பாதுகாப்பு மற்றும் வழிசெலுத்தல் திறன்களின் உயர் தரத்தை உறுதி செய்கிறது. அதன் 5ஜி தயார்நிலை தடையற்ற இணைப்புடன் மேம்பட்ட நெட்வொர்க் வேகத்தை அனுமதிக்கிறது. இந்த கட்டமைப்பு வாகனம் சார்ஜ் செய்யப்படும் (வி2எல்) மற்றும் வாகனத்திலிருந்து வாகனம் சார்ஜிங் (வி2வி) தொழில்நுட்பத்தையும் ஆதரிக்கும்.

அடுக்கு 4 - கிளவுட் கட்டமைப்பு

இந்த கட்டமைப்பு எதிர்காலத்தில் தயாராக இருக்கும் அளவிடக்கூடிய கிளவுட் கட்டமைப்பை அடிப்படையாகக் கொண்டது, இது மேம்பட்ட பயனர் அனுபவத்தை உறுதியளிக்கிறது, இது Arcade.ev, கார் ஆப்ஸ் தொகுப்பாகும். மேலும், ஆக்டி.ஈவி ஆனது அதிநவீன தீர்வுகளுடன் நிரம்பியுள்ளது, இது சிறந்த இணைப்பை உறுதியளிப்பது மட்டுமல்லாமல், மென்பொருள் மற்றும் பிற அம்சங்களுக்கான மேம்பட்ட ஓவர்-தி-ஏர் புதுப்பிப்புகளையும் வழங்குகிறது.



அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரி 'ஹார்ட்ஃபுல்னெஸ்' என்ற கல்விசார் மற்றும் தன்னார்வ அடிப்படையிலான ஊதிய நோக்கற்ற நிறுவனத்துடன் இணைந்து' தியானம், புத்துணர்ச்சி மற்றும் உங்களை உங்களின் சுயதன்மையுடன் இணைத்தல்' என்ற பொருண்மையிலான அமர்வுக்கு ஏற்பாடு செய்திருந்தது. 200 க்கும் மேற்பட்ட மாணவர்களை உள்ளடக்கிய இந்த நிகழ்வு, 'இதய நிறைவு தியான அமைப்பிலுள்ள' முறையான பயிற்சி பெற்ற பயிற்சியாளர்களால் வழிநடத்தப்பட்டது. நாள்தோறும் தியானம் செய்வதின் மூலம் அமைதியான, சுறுசுறுப்பான வாழ்க்கை முறையைப் பெற முடியும் என்பதை எடுத்துரைத்தனர். ஜனவரி 10 ஆம் தேதி வரை தொடர்ந்து நடக்கவிருக்கும் இப்பயிற்சியின் வழி மாணவர்கள் அமைதியான மனநிலையைப் பெறுவதோடு மட்டுமல்லாமல், அவர்கள் மேற்கொள்ளும் முயற்சிகள் பயனுள்ளதாக அமையும் வகையிலும் ஆயத்தப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

# ஐ.எம்.டி.பி 2024ஆம் ஆண்டில் மிகவும் எதிர்பார்க்கப்படும் இந்தியத் திரைப்படங்களை அறிவித்துள்ளது

சென்னை, 11 ஜனவரி 2024: ஐ.எம்.டி.பி, திரைப்படங்கள், தொலைக்காட்சித் தொடர்கள், மற்றும் பிரபலங்கள் ஆகியவை சம்மந்தமான தகவல்களுக்கு மிகவும் பிரபலமானதும் அதிகாரப்பூர்வமான ஆதாரமாக திகழும் இந்நிறுவனம், உலகெங்கிலும் உள்ள ஐ.எம்.டி.பி இணையத்தின் பார்வையாளர்கள் பார்த்த பக்கங்களின் அடிப்படையில் 2024ஆம் ஆண்டில் இந்தியாவில் அதிகம் எதிர்பார்க்கப்பட்ட திரைப்படங்களை வெளியிட்டுள்ளது. ஃபைட்டர் (2024ஆம் ஆண்டில் அதிகம் எதிர்பார்க்கப்பட்ட நம்பர் 1 திரைப்படம்) படத்தில் நாயகனாக நடித்துள்ள ரித்திக் ரோஷன் "ஐ.எம்.டி.பியைப் பொறுத்தவரை ஃபைட்டர் தான் மிகவும் அதிகம் எதிர்பார்க்கப்பட்ட திரைப்படம் என்பது மிகவும் ஆக்கப்பூர்வமான தகவலாகும். ஃபைட்டர் திரைப்படத்தின் டீஸர் மற்றும் பாடல்களுக்கு கிடைத்துள்ள வரவேற்பு அசாதாரணமானது, மேலும் ஜனவரி 25, 2024 அன்று இது நமது நேயர்களுக்கு ஒரு




முழுமையான சினிமா அனுபவத்தை வழங்கும் என்று நாங்கள் நம்புகிறோம். குடியரசு தினக் கொண்டாட்டத்தின் போது நாம் திரையரங்குகளில் உங்களை சந்திக்கிறோம்!" என்று குறிப்பிட்டார்.

ஐ.எம்.டி.பியின் 2024ஆம் ஆண்டுக்கான மிகவும் எதிர்பார்க்கப்பட்ட இந்தியத் திரைப்படங்கள்:

ஃபைட்டர், புஷ்பா: தி ரூல் - பகுதி 2, வெல்கம் டூ த ஜங்கில், சிங்கம் அகேன், கல்கி 2898 ஏ.டி, பகீரா, ஹனுமான், படே மியா சோட்டே மியா, கங்குவா, தேவாரா பகுதி 1, சாவா

குண்டூர் காரம், மலைக்கோட்டை வாலிபன், மெரி கிரிஸ்மஸ், கேப்டன் மில்லர், தங்கலான், இந்தியன் 2, யோத்தா, மே அடல் ஹூம், ஜிக்ரா.

2024 ஆம் ஆண்டில் வெளிவருவதற்காக திட்டமிடப்பட்டுள்ள இந்திய திரைப்படங்களில், மாதா மாதம் ஐ.எம்.டி.பி இணையத்தைப் பார்க்கும் உலகெங்கிலும் உள்ள கோடிக்கணக்கான இணைய பார்வையாளர்கள் பார்த்த பக்கங்களின் அடிப்படையில், இந்த தலைப்புகள் தான் ஐ.எம்.டி.பி பயனர்களிடையே தொடர்ந்து மிகவும் பிரபலமாக இருந்துள்ளன. இந்த ஐ.எம்.டி.பி பட்டியலில் உள்ள 20 தலைப்புகளில் ஒன்பது ஹிந்தி திரைப்படங்கள் ஆகும், ஐந்து தெலுங்கு, நான்கு தமிழ் மற்றும் ஒன்று மலையாளமாகும் என்ற தகவல் மிகவும் சுவாரஸ்யமானது. இந்த பட்டியலில் உள்ள முன்னணி ஐந்து திரைப்படங்களில் மூன்றில் தீப்பிகா படுகோன் நடித்துள்ளார்: ஃபைட்டர் (நம்பர். 1), சிங்கம் அகேன் (நம்பர். 4), மற்றும் கல்கி 2898 ஏ.டி. (நம்பர். 5). அவர் சமீபத்தில் அறிவிக்கப்பட்ட ஐ.எம்.டி.பியின் 2023ஆம் ஆண்டுக்கான மிகவும் பிரபலமான இந்திய நட்சத்திரங்கள் பட்டியலில் 3வது இடத்தைப் பிடித்துள்ளார். இந்த பட்டியலில் உள்ள நான்கு திரைப்படங்கள் ஏற்கெனவே வெளியான பிரபலமான திரைப்படங்களின் பாகங்களாக உள்ளன: புஷ்பா: தி ரூல் - பகுதி 2 (நம்பர். 2), வெல்கம் டு த ஜங்கில் (நம்பர். 3), சிங்கம் அகேன் (நம்பர். 4), மற்றும் இந்தியன் 2 (நம்பர். 17).

# சென்னை வெள்ள நிவாரணத்திற்காக இந்துஸ்தான் கோகோ கோலா பானங்கள் (எச் சி சி பி) 20,000 கிலோ உலர் உணவுப் பொருட்களை விநியோகித்துள்ளது

Coca-Cola
Hindustan Coca-Cola
Beverages

சென்னை, 11 ஜனவரி 2024: இந்தியாவின் முன்னணி எஃப்எம்சிஜி நிறுவனங்களில் ஒன்றான ஹிந்துஸ்தான் கோகோ கோலா பானங்கள் பிரைவேட் லிமிடெட் (எச் சி சி பி), மைச்சாங் புயலைத் தொடர்ந்து வெள்ள நிவாரண முயற்சியின் ஒரு பகுதியாக, திருவள்ளூர் மாவட்டத்தில் 20,000 கிலோ உலர் ரேஷன் தொகுப்புகள் விநியோகிக்கப்பட்டது. திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் டி பிரபுசங்கர் மற்றும் திருவள்ளூர் மாவட்ட ஊராட்சிகளின் உதவி இயக்குநர் ரூபேஷ்குமார் மற்றும் பிரவீன்குமார், துணை பிடிஓ, திருவள்ளூர் மாவட்டம் மற்றும் என்.எஸ்.ஜே.பிரேம்நாத், பஞ்சாயத்து தலைவர், நேமம், முன்னிலையில் செயல்படுத்தப்பட்டது இந்த முயற்சியானது இப்பகுதியில் புயலால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு உதவுவதில் மிக முக்கிய பங்கு வகிக்கிறது.

பேரழிவுகரமான இந்த வெள்ளமானது பல உயிர்களைப் பறித்தது மற்றும் மக்களுக்கு தேவையான அடிப்படைத் தேவைகள் கிடைக்க முடியாமல் செய்தது, இதை கருத்தில் கொண்டு ஹிந்துஸ்தான் கோகோ கோலா பானங்கள் (எச் சி சி பி) உறுதியான தனது ஆதரவை வழங்க முன்வந்தது. மக்களின் அன்றாட அவசரத் தேவையை உணர்ந்து, பாதிக்கப்பட்ட சமூகத்திற்கு அதன் பாதிப்புகளை சமாளிக்க மற்றும் உதவுவதற்காக எச் சி சி பி உலர் ரேஷன் விநியோகம் செய்தது. இந்த உலர் ரேஷன் தொகுப்புகளில் அரிசி, பருப்பு வகைகள், சமையல் எண்ணெய், உப்பு, சர்க்கரை மற்றும் பிற கெட்டுப்போகாத உணவுப் பொருட்கள் போன்ற அத்தியாவசியப் பொருட்கள் அடங்கியிருந்தன.

எச் சி சி பி இன் தலைமை பொது விவகாரங்கள், தொடர்புகள் மற்றும் நிலைத்தன்மை அதிகாரி திரு. ஹிமான்ஷு பிரியதர்ஷி குறிப்பிடுகையில், "தமிழ்நாட்டுடனான எங்கள் நீண்டகால தொடர்பை நாங்கள் மதிக்கிறோம், மேலும் அதன் மக்களுக்கு அவர்களின் தேவைப்படும் நேரத்தில் ஆதரவளிக்க நாங்கள் உறுதிபூண்டுள்ளோம். வெள்ளத்தில் இருந்து மீள்வதற்கான பாதை நீண்டது மற்றும் சவாலானது என்பதை நாங்கள் புரிந்துகொள்கிறோம், மேலும் எங்களால் இயன்ற ஆதரவை வழங்குவதன் மூலம் சமூகத்துடன் இணைந்து இந்தப் பாதையில் நடப்பதே எங்கள் குறிக்கோள். சூறாவளிக்குப் பிறகு இப்பகுதி மீண்டும் தனது நிலைப்பாட்டை அடைய முயற்சிக்கும் போது, அதன் மக்களுக்கான எங்கள் அர்ப்பணிப்பு அசைக்க முடியாததாக உள்ளது.

ஒய் 4 டி அறக்கட்டளையுடன் இணைந்து மேற்கொள்ளப்படும் எச் சி சி பியின் வெள்ள நிவாரண முயற்சி, அது சேவை செய்யும் சமூகங்களில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதற்கான அதன் உறுதிப்பாட்டை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. இந்த செயல்கள் ஒற்றுமை மற்றும் நெகிழ்ச்சி உணர்வை வளர்க்கின்றன, சூறாவளியின் சவால்களை அடுத்து வலுவான மற்றும் நம்பிக்கையான எதிர்காலத்திற்கு வழி வகுக்கிறது.